ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

| | | |
|---|---|---|
| சிலம்பு ௭ | மெய்கண்டான்யாண்டு-௭௱௬ ஆடித்திங்கள்<br>1929௵ ஜூலை௴—ஆகஸ்டு௴ | பரல் ௭ |


திருச்சிற்றம்பலம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடு மையாற னடித்தலமே.

அப்பர்.

உரை:

சிந்திப் பரியன, நான்கன் தொகை; சிந்ித்தலென்றது ஈண்டு ஆராய்தலை; 'ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி' என்னுஞ் சிவஞான போதத்து ஒன்பதாம் நூற்பாவினும், அதற்கு ஆசிரியர் சிவஞான முனிவர் நுணுகி யுரைக்கும் பேருரையினும் இதன் மெய்ப்பொருளைக் கண்டு கொள்க. இது சமயநெறியி னொருபடி. செந்தேன், இறைவனருள்; உயிர்களைச் சூழ்ந்து முனைத்துப் பிணித்து வலிக்கும் ஆணவமல மென்பார், 'மொய்த்து இருண்டு பந்தித்து நின்ற பழவினை' யென்றார். ஆடும் அடித்தலமென்க. அடித்தலம், ஈண்டுப் பன்மை மேற்று.

இழித்தன வேழேழ் பிறப்பு மறுத்தன வென்மனத்தே
பொழித்தன பேரெழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழமுன்சென்
றழித்தன வாறங்க மானவை யாற னடித்தலமே.

இழிந்தன, பொழிந்தன வென்பன மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல் விகாரம்; இழிந்தன பிறப்பெனத் தொடர்ந்து இடையே பண்பொட்டு விரித்துக் கொள்க. இழிந்தன, வினையாலணையும் பெயர். பொழிந்தன, முற்று. கிழித்தன வென்பதை முற்றெச்சமாக் கொண்டு அழித்தன வென்பதோ டியைத்துரைக்க. எனவே 'பிறப்பு மறுத்தன; பொழிந்தன; கூற்றை யுதைத்தன; வேள்வியைக் கிழித்தன் வழித்தன அடித்தல'மென் றுரைத்துக்கொள்க வென்பது. அடித்தலம் பொழிந்தன வென்றது, அடித்தலம் நிறைந்தன வென்றற்கு. பொழிதல், நிறைதற் பொருட்டாதலை 'ஆனந்தம் பொழிந்து (அ: உ, ௧௬) என்னுஞ் சிவஞானசித்தியாரா லுணர்க. போற்றவர், மார்க்கண்டேயர்; கீழ, கீழறவு செய்ய; தக்கன் கீழறவு செய்ய எதிர்ப்பட்டாரைக் கிழித்தனவாய் வேள்வியை யழித்தன வென்பது கருத்து. கிழித்தன, கோறன் மேற்று. இறைவன் ஆறங்கப் பொருளாயுள்ளவ னென்றற்கு 'ஆறங்கமான ஐயாற னடித்தலமே' யென்றார்.

மணிநிற மொப்பன பொன்னிற மன்னின மின்னியல்வாய்க்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன காதல்செய்யத்
துணிவன சீலத்த ராகித் தொடர்ந்துவி டாததொண்டர்க்
கணியன சேயன தேவர்க்கை யாற னடித்தலமே.

மணி, நீலமணி; என்றது அம்மையுருவுக்கு; பொன்னிறம், அப்பனுருவிற்கென்க. மின்னியல வென்பதன் பலவின் படர்க்கை அகர விகுதி குறைந்து நின்றது. கணி, சந்தனத்துக் கொரு பெயர். பொருப்பு, மலை; மின்னலின் இயற்கையுடையனவாய்ச் சந்தனத்தின் நிறத்தை யொத்துத் திருக்கயிலை மலையி லுள்ளன வென்பது கருத்து. மின்னலியற்கை, ஈண்டு இடைவிட்டு விட்டுத் தோன்றுதல்; கயிலை மலை வெள்ளிமலை யாதலின், அதன்கட் பொருந்திய இறைவன்றன் சிவந்த திருவடிகள் வெண்மை கலந்த செந்நிறத்தனவாய்ச் சந்தன நிறத்தை யொத்து மின்னின வென்க. துணிவன வென்பதற்கு, 'அருள்செய' வென்பது அவாய் நிலை. தொண்டர்க்கு அணியன, தேவர்க்குச் சேயன அடித்தல மென்பது.

இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொரு ளுடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருடரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே.

இருள், ஆணவமலம்; அது தருந் துன்பப் படலம், மாயை யிருவினை மயக்கங்க ளென்க. 'பொருள்தரு கண்' ணென்றார், மெய்ம்மை விளக்குங் கண்ணை; பொருளென்பது மெய்ம்மைக்கு வருமாறு, 'பொய்யுரையே யன்று பொருளுரையே' (௧௯த்திற, ௧௨) என்னுஞ் சிலப்பதிகாரத் தொடரானும், 'மெய்பெறத் தோன்றும்' (அகத்திணையியல்,அ) என்னுந் தொல்காப்பியத் தொடர்க்குப் 'பொருண்மைபெறத் தோன்று' மென்று இளம்பூரணரும் 'பொருள்பெறத் தோன்று' மென்று நச்சினார்க்கினியரும் உரைக்கு முரைகளானுந் துணியப்படும். உண்பொருள் - மெய்ப்பொருள், புகல், துணை; குருடர், கடவுணெறியைக் காணுதார். ஏற்றுதல் வீட்டுலகத்திற் கன்று; அருணெறிக் கென்க.

எழுவா யிறுவா யிலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாற னடித்தலமே.

எழுவாய், தோன்றுமிடம்; இறுவாய், அழியுமிடம்; இலாதனவென்றார், ஐயாற்று ஐயன் தோற்றமும் ஈறும் இல்லாதவ னென்றற்கு. வெங்கண், கொடுமை; தறுகணென்பதைப் போன்றதொரு சொல்; 'தறுகண் வேள்வி முளைத்ததோர் வெங்கண் வாளரவைத் துணித்து' (நாகமெய்த படலம், க) என்னுந் திருவிளையாடற் புராணத் தொடர்க்கண் இச் சொற்பொருள் காண்க. பிணி, மலப்பிணி; மாவென்னுங் குறிப்புக் கொடுமைக்கு. கெடுவாரைக் கெடவிட்டுத் திருத்துதலே சிறந்ததாதல் பற்றி 'விழுவாரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன' வென்றார். அழுவார்க்கு அமுதங்களெனப்பட்டன, அழுவார் பேரின்பச் சுவை காண்டலி னென்பது.

இளவழகனார்.

---

# சைவ சித்தாந்தமும் மேல்நாட்டு அறிவியல் நூல்களும்

[திரு. M. பாலசுப்ரஹ்மண்ய முதலியாரவர்கள், B. A., B. L.,]

சைவம் மிகத் தாழ்ந்த நிலையில் இக்காலத்தில் இருக்கின்றதெனப் பற்பலர் முறையிடுதலை நாம் நாடோறும் கேட்டு வருகிறோம். சமயவளர்ச்சி, சமய வாழ்க்கை முதலிய பொருள்கள் பற்றி அறிஞர் பலர் எழுதியும் பேசியும் தம்மாலியன்றவரை செயலில் காட்டியும் வருகின்றனர். ஒரு சாரார் சைவ சித்தாந்தத்துக்கு இருகண்கள் போன்று விளங்கும் தமிழ் மறையாகிய பன்னிரு திருமுறைகளையும், சாத்திரம் பதினான்கையும் கற்றுத் தாம் உணர்ந்த முடிபுகளை மேல் நாட்டு வரலாறு, இயற்கை, தத்துவம், ஆராய்ச்சி முதலிய அறிவியற்பகுதி நூல் முடிபுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து தாம் கண்ட ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி உண்மை எவ்வாறிருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர். இஃதே ஆராய்ச்சி முறை (Critical method) எனப்படும். இம்முறை அறிவுள்ள எவ்வகை மக்களுக்கும் எக்காலத்தும் உரித்தாயினும், இக்காலத்தில்தான், எல்லா நாட்டிலும், பேரறிஞர் பலராலும் போற்றப்பட்டும் கையாளப்பட்டும் வருகிறது. இம்முறையின் பயன் இத்தகையது என்று எடுத்துக் கூறலும் சைவ நன் மக்கள் பலருக்கு வேண்டியிருக்கிறது. ஏனெனில் ஆராய்ச்சி முறைப் பழக்கம் சற்று மில்லாத சைவர்களுள் ஒரு சாரார் "சாத்திரம் தோத்திரம் என வகுத்துக் கூறிய சமய நூல்கள் அருள்மொழிகள், அவைகளை அருள்கொண்டு அருள் பெற்றவர்களே அறிதல் கூடும், ஏனையோர் தம்மறிவு கொண்டு ஆராய்தல் பெரும் பேதைமை. இடருக்கு இடனாவதோடு பிறருக்கும் இடரே விளைக்கும். ஆராய்ச்சி முறையால் நலன் விளைதல் எவ்வாற்றானும் இல்லை" என மிகத் துணிவோடு இற்றைக்கும் சாதித்து வருகின்றனர்.

ஆகவே ஆராய்ச்சி முறையின் பெரும் பயனைச் சைவ நன் மக்கள் உணர்வது இன்றியமையாத முதற்கடனாகும். இவ்

வுணர்ச்சியை எழுப்பி, ஆராய்ச்சி முறையைக் கைப்பற்றி மேல் நாட்டு அறிவியற் பகுதிகள் பலவற்றிற்குரிய நூல்களைப் பயின்று அவற்றின் முடிபுகள் எவ்வாறு சைவசித்தாந்த முடிபுகளோடு முழுமையும் ஒத்திருக்கின்றன என்பதைக் கண்டு சைவ நன்மக்கள் தங்களறிவைப் பெருக்கிக் கொள்வதோடு சமயத்தையும் வளர்த்தல் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கம். இந்த வழியில் செய்யும் முயற்சியே பெரும் பலனைத் தரும். சைவத்தையும் உலகெங்கும் பரப்பும். இவ்வகை முயற்சியே சைவத்தினின்றும் விலகியவர்களையும் புறச்சமயத்தவரையும் சைவத்திற் சேர்ப்பிக்கும். இப்பணியே "அரன் நாமமே, சூழ்க வையகமுந் துயர் தீர்கவே" எனத் திருவாய்மலர்ந்தருளிய ஞான குரவர்க்கு ஏற்ற திருவடிக் காணிக்கையாகும்.

ஒரு போர்வீரன் உருவச் சிலையை நண்பர் இருவர் கண்டனர். அவ்வீரன் கையிலிருந்த கேடயம் ஒரு பக்கம் சிவப்பாகவும் பின் பக்கம் கறுப்பாகவும் இருந்தது. சிவப்புப் பக்கத்தை மட்டும் பார்த்தவன் சிவப்பென்றான். கறுப்பை மட்டும் பார்த்த நண்பன் கேடயம் கறுப்பென்றே சாதித்தான். இருவருக்கும் போர் விளைந்தது. இதைக் கண்ணுற்ற வழிப்போக்கன் அவர்களை வினவி இருபக்கத்தையும் காட்டி அவர்கள் கலாத்தைப் போக்கினான். இவ்வரலாற்றினின்றும் நாம் அறிய வேண்டியது ஒன்று. கேடயம் என்ற பொருள் ஒன்று. அதற்குச் சிவப்புப் பக்கம் கறுப்புப் பக்கம் என்ற பகுதிகள் இரண்டு. ஒரு பக்கத்தைமட்டுங் கண்டவனுக்குக் கேடயத்தின் இருபகுதிகளைக் கண்டதனால் கிடைக்கும் முழு அறிவு கை கூடவில்லை. ஒரு பகுதியைக் கண்ட அறிவுப் பகுதியே கிடைத்தது. இரண்டு பகுதிகள் சேர்ந்தாலன்றிக் கேடயம் என்ற முழுப்பொருள் இல்லை. அஃதே போல் இரண்டு பகுதிகளையும் அறிந்த அறிவுப் பகுதிகள் சேர்ந்தாலன்றி முழு கேடயத்தை யறிந்த முழு அறிவு இல்லை.

ஆகவே பொருள் ஒன்றாகவும் முழுமையாகவும் இருக்கிறது. அதன் பகுதிகள் பலவாகவும் தம்முள் வேறுபட்டும் இருக்கின்றன. அஃதேபோல் அப்பொருளை அறியும் அறிவும் நன்றாக

வும் முழுமையாகவும் இருக்கிறது. அவ்வறிவின் பகுதிகளும் பலவாகவும் தம்முள் வேறுபட்டும் இருக்கின்றன. பொருளின் பல பகுதிகளையும் ஒருங்கு சேர்த்துக் கண்டாலல்லது முழுப் பொருளின் உண்மை புலப்படாது. அஃதேபோல் பல அறிவுப் பகுதிகளைச் சேர்த்தாலல்லது முழு அறிவு கிடைக்காது. பொருளின் ஒரு பகுதியை முழுப்பொருள் என்று கொள்வது பெரும் பேதைமையாகும். அஃதேபோல் அறிவின் ஒரு பகுதியை முழு அறிவாகக் கொள்வதும் பெருங்கேட்டையே விளைக்கும். யானையின் ஒவ்வோர் உறுப்பை மட்டும் தொட்டறிந்த குருடர்கள் கதை யாய் முடியும், யானையின் முழு உருவத்தைக் கண்டவனே யானையைக் கண்டவனாவான். முழு உருவத்தைக் காணாது ஒவ்வோர் உறுப்பை மட்டும் தொட்டறிந்த குருடர் யானையை முறமென்றும், தூணென்றும், உலக்கை யென்றும் விளக்குமாறென்றுமே கொள்வர். அஃதேபோல் அறிவுப்பகுதிகள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்து உணராதார் ஊனக்கண் பெற்றும் ஞானக்கண் பெறாத குருடர்கள் என்பது வெளிப்படை.

உலகத்தில் எண்ணிறந்த பொருள்களை நாம் காண்கின்றோம். வேறு பல பொருள்களை நேரிற் காணா விட்டாலும் ஊகித்து அறிகிறோம். எல்லா வழிகளிலும் நாம் அறியக் கூடிய பொருள்களை யெல்லாம் சமய நூல் வல்லார்கள் மூன்று பெரும் பாகுபாடுகளாகச் செய்துள்ளார்கள். சுருக்கமாக முப்பொருள் என்றும் கூறுவார்கள். அவை கடவுள், உயிர், உலகம் என்பன. சமய நூல் வழக்கில் பதி, பசு, பாசம் எனப்படும் திரிபதார்த்தங்கள் இவையே.

இம்மூன்று பொருள்களின் இலக்கணங்களையும் அவற்றுள் ஒன்றற்கொன்று கலக்கும் முறை, இலக்கண முதலியவற்றையும் விரித்துக் கூறுவதே சமய நூல்களின் தலையாய நோக்கம். இம் மூன்று பொருள்கள் ஒவ்வொன்றிலும் பற்பல உட்பிரிவுகளும் ஒவ்வொரு உட்பிரிவுக்கும் தனித்த இலக்கணமும் உட்பிரிவுகள் ஒன்றோடொன்று கலக்கும் முறை வகை, விரிவுகளும் பலவாக உள்ளன. இவற்றை யெல்லாம் பல வேறு வகையாகக் கூறுவ

தால் சமயங்களும் சமய நூல்களும் பல வேறு வகையாக உள்ளன. வேறு வேறு வகையாகக் கூறப்பட்ட பொருள் ஒன்றே. ஆனால் பொருளை உணராமல் கூறப்பட்ட வேறுபாடுகளை வைத்து நாம் சமயப்போர் செய்கிறோம். இவ் வேறுபாடுகளால் முழுப்பொருளையும் உணர்வது மிகவும் அரிதாயிருக்கிறது, சிவப்பும் கறுப்புமாயுள்ள கேடயத்தைச் சிவப்பே யென்றும் கறுப்பே யென்றும் சாதிப்பதுபோலிருக்கிறது.

இவ் வேறுபாடுகளினின்றும் உண்மையை யெவ்வாறு அறிவது? காணப்படாத கடவுள், உயிர் இவைகளின் இலக்கண முதலியவற்றைக் காணப்பட்ட உலகத்தின் இலக்கண முதலியவற்றைக்கொண்டு ஒருவாறு அறிந்து தெளியலாம். காணப்பட்ட உலகத்தைப் பற்றிச் சமய நூல்கள் பலவகையாகக் கூறுகின்றன. அவற்றுள் சில அறிவியல் (Science) முடிபுகட்குப் பொருந்தியும், பல முரண்பட்டும் உள்ளன. சில அறிவியற் பகுதி நூல்கள் பலவற்றின் முடிபுகட்குப் பொருந்தியும், பல முரண்பட்டும் உள்ளன. ஆகவே சமய நூற்கொள்கைகளுள் எவை அறிவியல் முடிபுகட்கும் அறிவியற் பகுதி பலவற்றின் முடிபுகட்கும் எத்துணைப் பொருத்தமாகக் காணப்படுகின்றனவோ அத்துணை அவையே பிறவற்றினும் மேம்பட்டனவாக எல்லா அறிஞரும் கருதுவர்.

ஆகவே சைவ சித்தாந்தக் கொள்கைகள் ஏனைய கொள்கைகளினும் மிகச் சிறந்தன என்று மிக்க ஆர்வத்தோடு வெறும் பேச்சளவில் சைவ நன்மக்கள் கூறுவதாற் பயனென்னை? அக்கொள்கைகளையும் அவற்றின் பல பகுதிகளையும் அறிவியற் பகுதிகளின் பல முடிபுகளோடு ஒப்பிட்டு அவைகள் மிகப் பொருத்தமாக உள்ளன வென்றும் ஏனைய சமயக்கொள்கைகள் எவ்வளவு பொருத்தமற்றும் முரண்பட்டும் உள்ளனவென்றும் எடுத்து விளக்கினாலன்றிச் சைவத்தின் உயர்வை அறிஞர்களுக்கு எவ்வாறு வெளிப்படையாக உணர்த்தக்கூடும்?

தோத்திரம், சாத்திரம் என்ற நமது சமய நூல்களை அருள் மொழிகள் என்று ஒதுக்கி விட்டால் வேறு எங்கிருந்து நமது சமயக் கொள்கைகளை எடுத்துக் கொள்வதோ அறிகிலேன்.

அருள் மொழிகளை அருள் துணை கொண்டே யறிய வேண்டுமென்பது உண்மையே. ஆனால் அறிவு வளர வளரத்தான் அன்பு வரும்; அன்பு வளர வளரத்தான் அருள் தோன்றும், என்பதை அருள் வாதிகள் ஒரு நாளும் மறுக்க வியலாது. ஆகவே அறிவைப் பெருக்கி அன்பைப் பெருக்கியே அருளைப்பெற்று அறிய வேண்டும். அறிவு அருளுக்கு அடிப்படைக் கீழ் உள்ள பேரடிப்படையாகவே நிற்கிறது. அருள் மொழிகளை அருட்டுணை கொண்டும் அறிவினாலேயே அறிய வேண்டியிருக்கிறது. "பத்திநெறி நிலைநின்று நவகண்ட பூமிப் பரப்பை வலமாக வந்தும், பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்....மௌனத்திருந்தும் உயர்மலை நுழைவு புக்கும்...அற்பவுடல் கற்பங்கடோறும் நிலை நிற்க வீறு சித்தி செய்தும் ஞானமலது கதி கூடுமோ" என்றார் தாயுமானவரும். மேற் கூறியவை "அவனருளாலே அவன்றாள் வணங்கி" "அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்பன போன்ற வாக்குகட்கு எவ்வாற்றானும் முரண் பட்டனவல்ல வென்பதை நுண்ணறிஞர் உணர வேண்டும்.

உலக அறிவியற் பகுதி நூலாராய்ச்சியில் மேல் நாட்டவர் நம்மைவிட மிகச்சிறந்தவர்கள். அவர்கள் முடிபுகளை எண்ணிறந்த அரிய நூல்கள் வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். அவைகளைக் கற்று அம்முடிபுகளைச் சைவக் கொள்கைகளோடு ஒப்பிட்டு இரண்டுக்கும் உள்ள பொருத்தத்தைக் கண்டு பிறருக்கும் விளக்குவதே ஆங்கிலம் கற்ற சைவர்களின் முதற்கடன். அவ்விளக்கத்தை எளிய நூல் நடையில் எழுதி ஆங்கிலங் கல்லாத சைவ நன் மக்கள் உணருமாறு தமிழில் வெளியிடுவதே அன்னார் சைவத்துக்கு உதவ முன்னிற்கும் பெரும்பணி.

சில நாட்கள் முன்னர் மக் டூகல் என்ற தத்துவ நூலாசிரியர் எழுதிய "மக்கட்கூட்ட மன நூல்" (Mc Dougall's Social Psychology) என்ற நூலைப் படித்தேன். அதிற்கண்ட பல முடிபுகள் சைவசித்தாந்தக் கொள்கைகட்கு மிகப் பொருத்தமாக இருப்பதை உணரும்போ தெல்லாம் அளவற்ற உவகை எய்தி

னேன், ஆணவமலம் உயிரில் செம்பிற் களிம்பு போன்று ஞானிகளிடத்தும் " மாயாதே தன் சக்தி மாய்ந்து" இருக்கிறதென்பது சைவசித்தாந்தக் கொள்கை. மக்டூகல் நூலில் "instinct of self - assertion" (தன் வலியுறுத்தும் இயற்கையறிவு) என்ற பகுதியை உணரஉணரச் சைவக்கொள்கை இவ்வறிவியற்பகுதிக்கு எவ்வளவு அதிகப் பொருத்த முடையாதா யிருக்கிறதென்று எவரும் அறியக்கூடும். அஃதேபோல் வேறு சில பகுதிகளை யுணர யுணரச் சரிகை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளின் சிறப்பு, பெண்ணின் பெருமை, பெண்மையினின்றும் தாய்மையும் அதினின்று இறைமையும் தோன்றும் முறை, அன்பு அருள் இவைகளின் இலக்கணம், சாமம் தானம் பேதம் தண்டம் என்ற முறையின் உட்கருத்து, உயிர்ப்பணியின் பெருமை; சமயத்துக்கு அஃது அடிப்படையாகும் முறை முதலிய எண்ணிறந்த கொள்கைகளில் அமுந்தியிருக்கும் உண்மைகள் வெளிப்படுகின்றன. அந்நூலையும் அத்தகைய அரிய நூல்களையும் ஒவ்வொரு சைவரும் படிக்க வேண்டுகிறேன்.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டால் நாம் காணக் கூடிய முடிவான உண்மை ஒன்றே. சைவசித்தாந்தம் தொகை, மேல் நாட்டு அறிவியல் விரிவு. அவ்வறிவியலில் விரிவாகக் கூறப்பட்ட உண்மைகளனைத்தும் சைவ சித்தாந்தத்தில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன, இவ்வுண்மையை யறிவதே அறியும் அறிவு, இவ்வாராய்ச்சி பெருநலன் விளைக்கு மென்பதைக் கூறவும் வேண்டுமோ? ஏனெனில் தொகுத்துக் கூறப்பட்ட உண்மைகள் எளிதில் புலப்படா. கூர்ந்த அறிவும் அனுபவமும் உடைய அறிஞருக்கே புலனாகும். விரிவாகக் கூறப்பட்ட உண்மைகளோ பெரும்பான்மையோருக்கு நன்கு புலப்படும். விவரமாகக் காரணங்களைச் சொல்லிக் காரிய நிகழ்ச்சிகளை விளக்குவதால் யாவரும் உண்மையென்று அறிவதோடு தங்கள் அனுபவத்திலும் அவ்வுண்மைகளைப் பொருந்தச் செய்யலாம். ஆகவே விரிவான உண்மைகளை விளக்கி அவைகள் சைவ சித்தாந்தத்தில் எவ்வாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதை விளக்குவது சைவ நன் மக்கட்குப் பெருநலன் விளைக்கு மென்பதை எவரும் மறுக்க இயலாது.

ஆனால் ஆராய்ச்சி முறையைக் கொள்வோர் முக்கியமாக ஓர் எச்சரிக்கையைக் கவனிக்க வேண்டும். அறிவியற் பகுதி நூல் முடிபுகள் சில நிலையாக நிற்பதில்லை. (Not stationary, but changing) மாறிவருகின்றன. உதாரணமாகப் பொருள் ஆக்கத்தைப்பற்றி (Molecular theory, atomic theory, electronic theory, theory of relativity) பல முடிபுகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்துள்ளன. வரலாற்று நூலிலும் புதிய கல்வெட்டுகளும், நாணயங்கள், செப்பேடுகள் முதலியவைகளும் கிடைக்கக் கிடைக்க முடிவுகளும் மாறி வருகின்றன. ஆகவே ஏதோ ஒரு முடிபையே முடிந்த முடிபாகக் கொண்டு பெரிய மனக்கோட்டை கட்டிவிடுதல் கூடாது. முடிபுகள் மாறிக்கொண்டே வருகின்றன. ஆகவே ஆராய்ச்சி முறையிற் சென்று இடர்ப்படுதல் கூடாது என்று விலகி நிற்றலும் கூடாது. முடிபுகள் பலவற்றுள்ளும் மிகப் பொருத்தமானவை (consistent) எவை என்பதை நன்காராய்ந்து அவைகளைச் சைவ முடிபுகளோடு ஒப்பிட்டு விளக்குவதே உயர்தர ஆராய்ச்சியாகும்.

இவ்வாறு செய்யும் ஆராய்ச்சி முறையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து உண்மையைக் கடைப்பிடித்து விளக்குவதே மேன்மை. அதை விடுத்துக் கருத்து வேறுபாடுகளை ஆராயாமல் அவ் வேறுபாடுடையார்களைப் பலவாறு இழித்துக் கூறுவதோடு அவர்களை வைதும் அவர்கள் கூறாதனவற்றைக் கூறியதாகப் புரட்டிச் சொல்லியும் வருதல் சிற்சில அறிஞர்கள் 'திருத்தொண்டாக' விருக்கிறது. அன்னாரை அறிஞரென்றும் சைவரென்றும் கூடச் சொல்வது பிழையாகும். பெரிய கழகங்கள் உயரிய நிலையினின்றும் குலைந்து அழிவதும் சைவ சமயம் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதும் அத்தகையோர் இயற்றும் 'திருத்தொண்டின்' முழுப்பயனே. அன்னாரைச் சமய உட்பகைவர் (Traitors) எனக் கூறுவதும் மிகையாமோ? அத்தகையோர் பலரை மூன்று கண்ணுள்ள முழுமுதற் கடவுள் மறுமையின்றி இம்மையிலே தண்டித்து வருகிறார் . என்பது காண்போர்க்குக் கண்கூடு.

இக்கட்டுரையின் முடிபுகளைத் தொகுத்துக் கூறின்,

(1) சைவத்தைப் பரப்புதற்கு ஆராய்ச்சி முறை இன்றியமையாத பெருங் கருவி (2) அம்முறை பற்றி அறிவியற் பகுதி முடிபுகளைச் சைவ முடிபுகளிற் பொருத்திக் காட்டுவது சைவர்கள் செய்ய வேண்டிய கடமைகளுள் தலையாயது (3) அம்முறையில் வரக்கூடிய சில இடர்களைத் தவிர்த்தல் வேண்டும் (4) அம்முறைக் குதவியாகப் பல மேல்நாட்டு அறிவியல் நூல்களைத் தமிழில் வெளியிடல் வேண்டும் (5) அம்முறையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை இகழ்ந்து கூறுதல் பெருங்கேட்டை விளைக்கும் என்பனவே.

(சித்தாந்தம்)

---

# செட்டியல்

[திரு, க. ப. சந்தோஷமவர்கள். B.A., L.T.,]

## செட்டியலின் வரம்புகள்.

மக்கள் தமது அன்றாடக வாழ்க்கையில் நினைப்பதையுஞ் செய்வதையும் பற்றிக் கூறுவது செட்டியலாகும். ஆயினும் மக்கள் அலுவலில் ஈடுபடும் போது எத்தகைய எண்ணங்களால் ஏவப்படுகின்றாரோ அவைகளைப்பற்றியே செட்டியல் சிறப்பாகக்கூறும். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான விருப்பங்களும், கடமையைப் பற்றிய கருத்துக்களும் உயர்ந்த குறிக்கோள்களைப் போற்றியொழுகுந் திறனுமுண்டு. ஆதலின் அலுவல் செய்யுங்கால் ஒவ்வொருவனும் மேற்காட்டியவற்றால் ஏவப்படுகின்றான். என்றாலும் வேலை செய்வதற்கு ஒருவனைத் தூண்டுவது, தான் செய்யும் வேலைக்குக் கைம்மாறாக வரும் பணந்தான். இவ்வாறு வரும் பொருள் தன்னலத்திற்காகவோ, பிறர் நலத்திற்காகவோ, உயரிய நோக்கத்திற்கோ, இழிந்தவழியிலோ செலவிடப்படலாம். இது பலவகைப் பட்ட மக்கட்டன்மையைப் பொருத்தது. ஆனால் திண்ணமான ஒரு தொகையைப் பெறும் நம்பிக்கையே ஒருவனை அலுவலுக்கு ஏவுகின்றது. அலுவலுக்குத் தூண்டுகோலாய் நிற்கும் எண்ணங்

களை இங்ஙனம் பணத்தைக் கொண்டு அளவிடக்கூடு மாதலால் மக்களுடைய செய்கைகளைப்பற்றிக் கூறும் மற்ற நூல்களை விட செட்டியல் உயர்ந்து விளங்குகின்றது. இரசாயன சாஸ்திரியின் மிகநுட்பமான நிறைகோலின் உதவி கொண்டு, எங்ஙனம் இரசாயனம் மற்ற அறிவுத் துறைகளைக் காட்டிலும் சால நுணுக்கமானதாயிற்றோ, அது போன்றுகுறைவுடையதும் முரடுமாய செட்டியல் வல்லாரின் துலைத் துணையால் மக்கட் குழுவைப்பற்றிய அறிவைத் தரும் கல்வித்துறைக ளெல்லாவற்றுள்ளும் செட்டியல் மேம்பட்டு விளங்குகின்றது. என்றாலும் புலப்படும் பொருள்களை ஆராய்ச்சி செய்யும் அறிவுத் துறைகளுக்கு இணையான நுட்பத்தைச் செட்டியலில் காணலாகாது! ஏனெனில் ஒரு நிலையிலில்லாத மக்களியற்கையைப்பற்றி அது பேசுகின்றது.

பொதுவாக வாழ்க்கையில் ஒவ்வொரு மகனும் நாடோறும் கையாளுகின்ற முறைகளையே செட்டியல் வல்லாரும் கையாளுகின்றனர். ஆனால் அவர்கள் அம்முறைகளைப் பொறுமையுடனும் கருத்துடனும் கவனத்துடனும் கையாளுகின்றனர். மக்களுக்கு மேலானவற்றின் மேலும் கீழானவற்றின் மேலும் நாட்டமுண்டு! சிலர் நன்மைசெய்ய விரும்புகின்றனர், வேறு சிலர் நல்ல உணவு பெற விரும்புகின்றனர். இவைகளை ஒத்திட்டுப் பார்த்தல் பொருளியலின் நோக்கமன்று. பெரும்பாலோர் யாதாயினு மொன்றைக் குறித்துப் பேசுகையில் அவர்கள் உளஞ்செலும் போக்கையே செட்டியற்காரரும் பின்பற்றி நின்றார். ஆனால் முன் கூறியபடி அதிகக் கவலையுடனுங் கருத்துடனு மிதைச் செய்கின்றனர். இங்ஙனமவர்கள் பின்பற்று முறை வருத்தத்தைத் தருவதாயிருப்பதால் செட்டியற்காரர் கூறும் வழக்குகள் இயற்கைக்கு மாறுபட்டன வென்று சிலர் நினைக்கின்றனர். உண்மையஃ தன்று. தாங்களறியாமல் எல்லோரும் நாடொறும் வழங்குகின்ற மெய்ப்பிக்கப்படாத நினைவுகளையும், பிறர்க்கு வெளியிடாது உள்ளேவைக்கும் எண்ணங்களையும் செட்டியற்காரர் பகுத்தறிந்து வெளிப்படுத்துகின்றனர். எங்ஙனமெனின், ஒருவன் தன் கையிலுள்ள சில்லறையை வெற்றிலை பாக்கு, பலகாரம், வீடு செல்வதற்கு வண்டிக்கூலி ஆகிய வற்றுள் எவ்வகையிற் செலவிடலா மென்று ஐயப்படுவானாயின்

பெரும்பாலோர் பேசும் வழக்கத்தைப் பின்பற்றி மேற்குறித்த மூவகையிலும் அவனுக்கு ஒரே அளவான களிப்புண் டென்பதை அறிந்து கொள்ளலாம். அன்றியும் ஒரே நிலைமையிலுள்ள இரண்டு ஆட்கள் தமக்கு உவகையூட்டு மொன்றன் பொருட்டுத் தாமெப் போதுஞ் செய்வதைவிட இரண்டு நாழிகை அதிக வேலைசெய்ய உடம்படுவாராயின், அல்லது ஒரேபடியி லுள்ள இருவர் அதன் பொருட்டு ஒரு ரூபாய் செலவு செய்ய முன்வருவாராயின், ஒத்த அளவுள்ள களிப்பைத் தரும் ஒன்றன் பொருட்டு இவர்கள் முயல் கின்றார்களென்பது தெளியப்படும். வெற்றிலை பாக்கு, பலகாரம் முதலியவற்றிற் கருத்தைச் செலுத்திய முன் கண்ட மகன் சிறிது நேரம் பொறுத்து, தான் வீட்டுக்குப் போகும் வழியிலிருக்கும் வயதுமுதிர்ந்த கிழவனைப்பற்றி நினைத்து, தனது உடல் நலத்திற் காகக் கையிலுள்ள காசைச் செலவு செய்வதா, அல்லது கிழத்தன மடைந்தவனுக்குக் கொடுத்து மகிழ்வதா என்று ஐயப்பட்டா னென்று வைத்துக்கொள்வோம். அவனுடைய விருப்பம் இவ் வாறும் அவ்வாறும் மாறும்போது அவனுடைய உளநிலை மாறு பாடடைகின்றது. இம் மாறுபாடு ஒரே பணத்தொகையின் பொ ருட்டு எழுந்ததால் இருவகையான உள்ளநிலைகளும் ஏற்றத் தாழ்ச்சி யின்றி ஒத்திருப்பன வென்பது அறியப்படும். இவைகளில் நல்லது எது கெட்டது எது என்பவைகளைப்பற்றிச் செட்டியற் காரர் கருதாமல் மக்களைச் செய்கைக்குத் தூண்டும் நினைவுகளாக மாத்திரம் எண்ணுகின்றனர். இங்ஙனம் பெறப்படும் தொகை மதிப்பு செட்டியலின் தொடக்கமாகும்.

மற்றும், ஒரு ரூபாய் தேடவேண்டு மென்ற நாட்டம் பணக் காரர்களுக்கு அதிகமாயிராது. ஏழையின் உளத்திலோ அவ் வெண்ணம் முனைந்து நிற்கும். செல்வம் படைத்தவ னொருவன் ஒருநாட் சிற்றுண்டிக்கு ஒரு ரூபாய் செலவிடலாமா என்று ஆராய்கிறான்; வறியவ னொருவன் பத்துநாட் சிற்றுண்டிக்கு ஒரு ரூபாய் செலவு செய்யலாமாவென்று கருதுகிறான்; இருவரும் ஒரு மகிழ்ச்சி குறித்தே ஆராய்கின்றனர். ஆனால் முன்னவனுடைய மகிழ்ச்சி பின்னவனுடைய மகிழ்ச்சியைவிட அளவிற்குறைந்தது. பெருமழை பெய்யு மொருநாளில் திங்க ளொன்றுக்கு முப்பது

ரூபாய் பெறு மெழுத்தாளி மழையைப் பாராமல் வேலைக்கு நடந்து போவான்; மூந்நூறு ரூபாய் வாங்குகிறவன் அங்ஙனஞ் செய்யான்; அவன் வண்டியிலேறிப்போவான். ஏனெனின் வண்டிக் கூலிக்குக் கொடுக்கும் பணத்தை இழப்பதால் ஏழை பணக் காரனைவிட அதிக வருத்தப்படுகிறான். அரைரூபாயால் ஏழைக்கு வருமகிழ்ச்சி பணக்காரனுக்கு அதே தொகையால் வரும் மகிழ்ச்சி யைவிட அளவிலதிகமாகும்.

இவ்வாறு வரும் உயர்வு தாழ்வு பலவாயினும், மாந்தருக் குள்ள வேற்றுமைகளை அகற்றி நோக்குவோமாயின், ஒரு நன்மை யைப் பெறுவதற்காக அல்லது ஒரு தீமையை விலக்குவதற்காக ஒரே வரும்படியையுடைய மக்கள் செலவு செய்யுந் தொகையைக் கொண்டு அவர்களுடைய நன்மை தீமைகளின் அளவை யறிய லாகும். ஆண்டிற்கு ஆயிரம் ரூபாய் வருமானமுடைய ஆயிரந் தலைக்கட்டுகள் தஞ்சாவூரிலும், மற்றொரு ஆயிரந் தலைக்கட்டுகள் செங்கற்பட்டிலுமிருக்கின்றன. தலைக்கட்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரிபோட்டால் தஞ்சாவூரில் உண்டாகும் வருத்தமே செங்கற்பட் டிலுமுண்டாகும் என்பது பெறப்படும்; இங்ஙனமே ஒரு ரூபாய் அதிக வருமானமிருந்தால் அதனால் வரும் உவகை இருவிடங் களிலு மொத்தேயிருக்கும். பணமெனினும், வாங்கும் ஆற்றல் எனினும், செல்வத்தை ஆளுதலெனினும் ஒக்கும். பணமே மக் களின் முதன்மையான நோக்கம் என்றாவது பணத்தைத் தவிர வேறொரு பொருளும் செட்டியலிற்கு இல்லையென்றாவது நாம் நினைப்பதில்லை. பணத்தைக்கொண்டு மக்கள் உட்கருத்தை அள விடக் கூடுமென்பது பற்றியே பொருள் நூல் செல்வத்தை ஒட்டி நிற்கின்றது. இதை யறியாது பத்தொன்பதாவது நூற்றாண்டி லிருந்த சில பெரியார் தன்னல நோக்கமின்றி வேறொரு நோக்க மும் செட்டியனுக்குக் கிடையாதென்று தப்பாய் மொழிந்தார்.

---

# திருமுருகாற்றுப்படை விளக்கம்

(இதன் உரிமை யாக்கியோற் குரியது)

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை)

(௩அ௨-ம் பக்கத் தொடர்ச்சி)

## (௬) பழமுதிர் சோலை

பேரறிவாள! முருகப்பெருமான் அவ்விதங் குன்றுகடோறுந் திருவிளையாடல் செய்துகொண்டிருப்பது மல்லாமல், சிறிய தினை யரிசியைப் பூக்களுடன் கலந்து பிரப்பரிசியாக வைத்து யாட்டினை யறுத்திட்டுக் கோழிக்கொடியுடனே குமாரப்பெருமானையு மவ் விடத்தே பொருந்தும்படி நிறுத்திக் கொண்டு, தொடங்கிய சிறப் புப்பொருந்திய திருவிழாக்கொண்டாடு மொவ்வோரூரிலுந் திகழ்ந் திருத்தலுங் கூடும், அன்றி, அவ்வெம்பெருமானை, அவன் பக்க லன்பு பூண்டார் வாழ்த்துதலினாலே, அவனது அருள்பொருந்தி யிருக்கின்ற விடங்களிலுங் காணலாம்; அல்லது, அன்னான் ஆவு ரிஞ்சு தறியினு மெழுந்தருளியிருப்பன். அத்துடன், வேலன் (படிமத்தான்) வெறியாடுகின்ற விடமும், காடும், காவும், அழகிய வாற்றிடைக் குறையும், யாறுகளும், குளங்களும், இவைகளின் வேறாய பல விடங்களும், நாற்சந்தியும், முச்சந்தியும், புதிய பூக் களையுடைய கடப்ப மரங்களும், ஊர்க்கு நடுவேயுள்ள பலர் தங்கு மரத்தடியும், அம்பலமுமாகிய அவ்வவ் விடங்களிலே யன்னானைக் காணுதலு மியலும். அது வன்றி, குறப்பெண், தெய்வமின்றென் பார் அஞ்சும்படியாக வெம்பெருமான் எழுந்தருளும் வண்ணம் வழிபாடு செய்த அச்சம் பொருந்திய வகன்ற நகரின்கண்ணே வெறியாடுகின்ற விடத்திலுள்ளார் ஆரவாரிக்க, வரம் வேண்டு வோர் பாடி, கொம்பு வாத்தியங்கள் பலவற்றையுஞ் சேரவூதி, பெரிய மணிகளை யொலிப்பித்து, கெடாத வலியினையுடைய 'பிணி முகம்,' என்னும் பட்டப்பெயரைக் கொண்ட யானையை வாழ்த்தி வேண்டியாங்கு பெற்று வணங்க எம்பெருமான் எழுந்தருளி

யிருத்தலுங் கூடும். யான் முருகப்பெருமானை யடையத் தெரிந்து கொண்ட வழிகளிவையே.

மேற்கூறிய அவ்வவ்விடங்களிலேனும், அல்லது, பிற விடங்களிலேனும் எம்பெருமானை நீ காண நேர்ந்தால், திடுக்கிடல் திகைத்தல் முதலியன வின்றித் தெளிந்த முகத்தோடே விரும்பி, "பெரிய மூங்கில்களையுடைய மலையரசன் மகளுக்கு மகனே! மாறு பட்டார்க்குக் கூற்றுவன் போன்றவனே! அணிகலன்கள் பூண்டு தலைமையோடமைந்த காடுகிழாளின் குழந்தையே! அந்தணர் கொண்டாடு மரும்பெறற் செல்வமே! தெளிந்தோர் புகழ்ந்து செப்புஞ் சொற்களின் றிரட்சியே! மள்ளர்க்குட் சிறந்த மழவிளங் காளையே! பலரு மெச்சும்படியான பல சொற்களில் வல்ல புறச் சமயப் பாவலர்களுக் கரியேறு போன்றவனே! இடுக்கட்பட்டு வந்தவர்கட் கருளு மிளஞ்சேயே! நெருங்கித் தாக்குகின்ற போர்கள் பலவற்றையும் வென்று முடித்த மார்பினிடத்தே பொன்னணி கலங்களை யணிந்து செம்மையொளி வாய்ந்துள்ள செம்பொருளே! இரப்போர்க்கு வேண்டுவன வீந்து பாதுகாத்துக் கொடியரை யச்சத்தாற் பின் வாங்கும்படி செய்த குமரவேளே! தேவரு முனிவரும் புகழுஞ் சீர்த்தியினையுடைய செவ்வேளே! மறத்தொழிலிலே சிறந்த வலியினைக் கொண்ட சூரபன்மாவின் குலத்தை யொழித்த மதவலியே! நின்னொ டொப்பாவார் காணக்கிடையா மெய்யறிவினை யுடையோய்"! என்று முன்னர்ப் புகழ்ந்து பெருமானை யெதிர் முகமாக்கிக் கொள்வாயாக.

பின்னர், கைகளிரண்டையும் தலைமேலே வைத்து வாழ்த்தி, அவனது திருவடிகளிலே யுனது தலை பொருந்தும்படி வணங்கி, "நீண்டுயர்ந்த விமயமலை யுச்சியில், நீல நிறமான தருப்பைப்புற்கள் வளர்ந்த பசிய சரவணப் பொய்கையினிடத்தே யுள்ள தாமரைப் பாயலில், அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவு பொருந்திய செல்வ! கல்லாலின் கீழிருந்த சிவபெருமானின் புதல்வ! உலகத்தாருக்கு வெற்றியையுந் தான் வெல்லும் போரையுஞ் செய்யும்படியான கொற்றவை சிறுவ! வளைகின்ற வில்லையுந் தேவர்களாகிய படையினையுங் கொண்ட தலைவ! இன்பத்திற்குரிய மாலை யணிந்த

மார்ப! எல்லா நூல்களையு மறியும் புலவ! போரி லொருவ! பொரு தலில் வல்ல வீர! தெய்வ யானையார்க்கும் வள்ளி நாய்ச்சியாருக் கும் மணாள! வேலினைக் கையிற்கொண்ட மிகுபெருஞ் செல்வ! 'கிரவுஞ்சம்' எனப் பறவைப் பெயர் கொண்ட குன்றினைப் பிளந்த குறையாத வெற்றிக்கும், தேவருலகைத் தீண்டும் படியான நீண்ட மூங்கில்கள் வளர்ந்த குறிஞ்சி நிலத்திற்குங் கிழவ! அடைதற் கருமையான பெருமையினை யுடைய நற்பொருளாகிய வீட்டினை யுடைய வேல் முருக! அவ்வீட்டினை நச்சி வந்தார்க்கு நல்கி, நுகர் விக்கு நல்லிசையாள! பொருந!" என அண்மையாக வழைத்துக் கொள்வாயாக. பிறகு "நின் தன்மை யெல்லா முற்ற வளவிட்டறி தல் பல்லுயிர்க்கு மரிதாகையினாலே, யான் தெரிந்து கொண்ட முறைமையிலமையாது பலவற்றையுங் கூறிப்புகழ்ந்து நினது திரு வடிகளைப் பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன்," என்று தெரி வித்துக்கொள்வாயாக.

நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்த வவ்வள விலே, வேறு வேறான, பல வடிவங்களையுடைய சிறியராய் (எம் பெருமானைச்) சேவித்து நிற்பார் பலரு மொன்று கூடி, விழாக் கொண்டாடிய அவ்விடத்தே பொலிவு பெறத் தோன்றி முருகப் பிரானிடத்து, "பெரும! அறிவு முதிர்ந்து வாய்மையோடு கூடி வீடு பேற்றினை வேண்டுதல் வல்ல விப்பெரியோன் காப்பாற்றத்தக்கவனு வன். இன்னும், இவ்வன்பன் நினது நல்ல புகழினை யெடுத்துப் பேச விரும்பி, கேட்போர்க் கின்பமு முறுதியும் பயப்பனவாகிய மிகுந்த பலவற்றையும் வாழ்த்தி வந்தவனு மாவன்," என்று உன்னைத் தாங்கிக் கூறுவார்கள்.

உடனே, சிலம்பாற்றினையும், பலவிதப் பழங்கள் பழுத்து நிறைந்த சோலைகள் பலவற்றையுங் கொண்ட சோலைமலைக் குரி யனான முருகப்பெருமானாகிய தலைவன் தெய்வத்தன்மை யமையப் பெற்று வலிமை விளக்கும்படியான வடிவினையும், வான்றோய் வளர்ச்சியினையு முடைய தான் கோயிற்கண் சென்றமர்ந்து, கண் டார் திடுக்கிடுந் தெய்வத்தன்மையை யுள்ளடக்கிக் கொண்டு, மணம் வீசுகின்ற தெய்வத் தன்மையோடு கூடிய பழமையாகிய

தனதிளைய வடிவினை யுனக்குக்காட்டி, "உனது வருகையின் கருத்தினை யான் முன்னரே யறிவல். அக்கருத்து நினக்கெய்துதலரிதென்று அஞ்சுதலை யொழி," என வருளோடு கூடிய நன் மொழிகளைப் பலபடிகளாக வருளிச் செய்வன். இருண்ட நிறத்தினைக் கொண்ட கடல் சூழ்ந்த விவ்வுலகில், நீ யொப்பற்ற நிலைமையையுடையையாய், யாதொரு கேடு மின்றிப் பிற ரெவராலும் பெறுதற்கரிய வீடு பேற்றினைப் பெற்று மகிழ்வை. ஆகலின், அப்பெருமான் வீற்றிருக்கு மிடங்தேடிச் சென்று கண்டு வீட்டினைப் பெற்று விளக்குவாயாக.

குறப்பெண் வழிபாடு செய்யு முன், மாட்சிமையோடு சிறப்பினைக்கொண்ட கோழிக்கொடியுடன் கண்டார் நெஞ்சம் பொருந்தியிருக்கும்படி நகரை யழகு செய்து நெய்யுடனே வெண்சிறு கடுகினையு மணிந்து மறை மொழிகளைச் சிறிது கூறி வழிபட்டு வெறியாடு மிடத்தில் அழகிய மலர்களைத் தூவுவாள்; தம்மில் மாறுபட்ட வடிவினையுடைய விரண்டுடைகளை யுள்ளொன்றும் புறமொன்றுமாக வுடுத்திக்கொள்வாள்: சிவந்த நூலைக் கையிற் காப்பாகக் கட்டுவாள்; வெண்மையான பொரிகளை யம்மலர்களின் மீது சிதறுவாள்; மிகுந்த வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய நேர்ந்துவிட்ட கொழுத்த வாட்டுக்கிடாவினது குருதியோடு கலந்து பிசைந்த தூய வெண்மையான வரிசியைச் சிறு பலியாக விடுவாள்; பல பிரப்புக்களைப் படைப்பாள்; சிறிது பசு மஞ்சளோடு நல்ல சந்தனத்தையுங் கலந்து தெளிப்பாள்; பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையினையும் மற்ற நல்ல குளிர்ந்த மாலைகளையு மொருபடித்தாகத் துண்டித்துத் தமக்கொப்பில்லாத வண்ண மசைய அவ்விடத்தே தூக்கிக் கட்டுவாள்;நெருங்கிய மலைச்சாரல்களிலுள்ள நல்லவூர்களைப் "பசிபிணி முதலியன நீங்குக. வசிவளஞ் சுரக்க," என வாழ்த்துவாள்; மணத்தோடு கூடிய புகையினைக் காட்டிக் குறிஞ்சிப் பண்ணைப் பாடுவாள், முழங்குகின்ற வோசையினையுடைய வருவியுடன், இனிய பல வாத்தியங்களு மொலிக்க, மேலும் நறிய பல பூக்களையிடுவாள்; கண்டார்த்து அச்சந்தோன்றும் வண்ணம் உதிரமளைந்த செந்தினையினையும் பரப்புவாள்; முருகப் பிரானுக்கு விருப்பமான

வாச்சியங்களை யொலிக்கச் செய்வாள். இவைகளே அவள் வழி பாட்டிற்குக் கைக்கொள்ளும் வகைகளாம்.

அறுவராற் பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வ னென்ற தென்னை யெனின், விசும்பின் தெய்வமாகிய சதாசிவ னும், காற்றின் தெய்வமாகிய மயேச்சுரனும், தீயின் தெய்வமாகிய வுருத்திரனும், நீரின் றெய்வமாகிய அரியும், நிலத்தின் றெய்வமா கிய அயனுமென்ற ஐவருட் டூத் தெய்வமாகிய வுருத்திரன் தனது சிறந்த கையிலே, இறைவனிடத்தினின்று மிந்திரன் வாங்கிய கருப்பத்தினை யெழு முனிவர்களும் வாங்கித் தமக்குத் தரிக்க லாகாமையின் முத்தீக் குண்டத்திட, அதனை வாங்கி யதனூற்றலை யடக்கினன். அதனல், முனிவரெழுவரும் அக் கருப்பத்தினைக் கொண்டு சென்று தம் மனைவியர் கைக்கொடுத்தனர். அருந்ததி யொழிந்த வறுவர் அதனைப் பெற்று விழுங்கிச் சூன் முதிர்ந்து ஆறு வடிவு கொண்ட அறுமுகப் பெருமானை யீன்றன ரென்பதாம்.

எம்பெருமாற்குரிய பழமுதிர்சோலை மலையினிற் பொருந்திய சிலம்பாற்றின் சிறப்போ, வேறுபட்ட பலவாகிய துகிற் கொடி களைப்போ லொளிவிட் டசைந்துகொண்டிருக்கும் நீர் வீழ்ச்சியை யுடையது; அகிற் கட்டைகள் பலவற்றை யடித்துக் கொண்டு போவது; பெரிய சந்தன மரங்கள் பலவற்றைப் புரட்டிக்கொண்டு செல்லும், சிறு மூங்கிலினது பூவோடு கூடியாடுகின்ற கொம்புகள் தனித்தனியே பிரிந்து சிதறும்படி யதன்வேரைக் கிளப்பிக்கொண் டேகும்; தேவருலகத்தைத் தீண்டுகின்ற வுயர்ந்த மலையினிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப் போன்று தேனீக்களாற் சேர்க்கப் பட்ட குளிர்ந்த மணக்கின்ற விரிந்த தேன் கூடுகளைச் சிதறடிக் கும்; நல்ல ஈரப்பலாவின் முற்றிய சுளைகள் பல அதனிடத்தே கலந்து பரவும். மிகவு முயர்ந்து வளர்ந்த சுரபுன்னையின் நறிய பூக்களை யது உதிரச்செய்யும். நீர் வீழ்ச்சியைக் கண்ட கருங் குரங்குகளும் கரிய முசுக்கலைகளும் நடுக்கங்கொள்ளும். புக ரோடு கூடிய நெற்றியினைக்கொண்ட பெரிய பிடிகள் புல அவ் வருவி யோட்டத்திலகப்பட்டுக் குளிர்ந்து கரையி லொதுங்கப் பெறும். பெரிய களிறுகளினது முத்துக்களோடு கூடிய வெண்

கொம்புகள் பல வதனிடத்தே கலந்து செல்லும்: நல்ல பொன்னு மணியும் புரண்டொளிவிட்டுத் திரியும். அவ்வாற்றினலைகள் பொற்றுகள்களைத் தெள்ளிக் கரையிலொதுக்கும்.

அச் சிலம்பாறு, வாழையினது பெரிய அடிப்பாகத்தைத் துணித்தும், தெங்கின திளநீர்க்குலைகளை யுதிரத் தாக்கியும், மிளகினது கொடியிலுள்ள பெரிய கொத்துக்களைச் சாயும்படி செய்தும், பீலியினையுடைய பின் பக்கத்தினையும் மெதுவான நடையினையுங் கொண்ட மயில்களோடு கோழிகளும் அவற்றின் வலிய பெட்டைகளும் மற்றும் பலவும் அஞ்சி யோடச் செய்தும்; ஆண் பன்றியோடு உள்ளீடில்லாத கரிய பனையினது புல்லிய செறும்பை யொத்த கரிய நிறங்கொண்ட மயிரினையுடைய வுடம்பினையும், வளைந்த வடியினையும் பெற்ற கரடியையும் பெரிய கல் விண்டதாலுண்டாகிய குகைக்குட் செல்வித்துப் பதுங்கச் செய்தும், பெரிய கொம்புகளை யுடைய காட்டு மாடுகளை முழங்கச் செய்தும், மலையினுச்சியிலிருந்து இழுமென்ற வோசை யுண்டாகும்படி குதித்துப் பாய்ந்தும் நடக்குஞ் சிறப்பினை யுடையது.

---

# சைவ எல்லப்ப நாவலர்

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M.A., L.T.]

(௩௪அ-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவ எல்லப்ப நாவலர் சரித்திர விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை; அவர் 'நாவலர்' என்னும் பட்டம் பெற அவரிடத்து அமைந்திருந்த சொல்வன்மை முதலிய உயர்குணங்களின்ன வென்று நேரில் தெரிந்துகொள்ள நமக்கு ஏதுவில்லை. ஆயினும் அவர் சங்க விலக்கியங்கள் முதலிய இலக்கியங்களனைத்தும் நன்கு பயின்றவரென்றும், தமிழ்க்கலையே யன்றி வடகலையும் பயின்ற நுண்மதியாளரென்றும், பத்திநெறியிற் றலைநின்றவ ரென்றும், பாரகாவியங்க ளெழுதும் வன்மை வாய்ந்தவரென்றும் அவர் இயற்றிய நூல்களி லொன்றிரண்டைக் கற்றுரு

மறியாதிரார். நாவலருடைய தலபுராணங்கள் தலப்பெருமை யுரைப்பதோடமையாமல் கற்போர்க்குப் பல நீதிகளை யறிவிக்கும், சிவபத்தியை வளர்க்கும், தமிழறிவை யூட்டும். அவற்றுள் ஒன்பான் சுவையு மலிந்திருத்தலால் சிறந்த காவியங்கள் போல அவை கற்போர் மனத்திற் களிப்பை யுண்டாக்குவன.

நாவலர் இயற்றிய நூல்களுட் பெருவழக்காயிருப்பது அருணசல புராண மொன்றுமே. **திருவிரிஞ்சைப் புராணமும் தீர்த்தகிரிப் புராணமும்** நெடுநாண் முன்னர் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டும் போற்றுவாரில்லாமையால் அவை அகப்படுவது அருமையாயிற்று. **செவ்வந்திப் புராணம்** இரண்டு முறை அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது; ஆயினும் இப்பொழுது பிரதிகள் அகப்படுவது அருமையே. **திருவெண்காட்டுப் புராணமும்** அவ்வாறே அச்சிடப்பட்டுச் சில காலம் வழங்கிப் பின் மறைந்தது. **திருச்செங்காட்டங்குடிப் புராணமும் திருவாரூர்க்கோவை**யும் அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை **திருவருணைக் கலம்பகம்** கலம்பகப் பிரபந்தங்களுட் சிறந்த தொன்றாக மதிக்கப்படுகின்றது. **திருவருணை யந்தாதி** அகப்பொருட்டுறைகளமைந்த தொரு சிறந்த அந்தாதிப் பிரபந்தம். இவையிரண்டும் வழக்கிலுள்ளனவே. இக்காலத்தில் **அருணசல புராணம்** பதிப்பிப்போர் அருணைத்தலத்தின் மேலுள்ள பிரபந்தங்களை யெல்லாம் சேர்த்தச்சிடும் நியமமுடையராயிருத்தலின் இவைஎன்றும் வழக்கிலிருக்கு மென்று சொல்லலாம். **சௌந்தரியலகரி யுரையும்** பயிலப்படும் நூல்வகையுட் சேர்க்கத்தக்கதே.

## அருணசல புராணம்

நினைக்க முத்திதரும் பெருமை வாய்ந்த பெருந்தலத்தின் மகிமையை யெடுத்தியம்பும் **அருணசல புராணம்** தமிழ் நாடெங்கும் பெரு வழக்காயிருத்தல் பொருத்த முடையதே. இத்தலத்தின் பெருமையினையே யுரைக்கும் **அருணகிரி புராணம்** இருக்குமிடந் தெரியாமலிருந்து சிதம்பரம் வாமதேவ முருகப்பட்டாகரால் விக்கிரம ஆண்டில் [கி. பி. 1880] அச்சிடப்பட்டுச்

சிறிது காலம் வழங்கி மீண்டும் மறைந்தது. அருணாசல புராணமோ இராக்ஷ ஆண்டில் [கி. பி. 1855] முதலாவது அச்சிற் பதிக்கப்பட்டுப் பின் எண்ணிறந்த முறை அச்சிடப்பட்டுள்ளது. முதற்பதிப்பிலேயே மழவை மகாலிங்கையருரையும் காணப்படுகின்றது. அருணாசலபுராண வசனப்பதிப்புகளும் சில வெளிவந்துள்ளன. அருணகிரி புராணம் இயற்றப்பட்ட காலம் கலி 4655 [கி. பி. 1553] என்று அந்நூலாலேயே விளங்குகின்றது. அருணாசல புராணம் அதற்கு முற்பட்டதா பிற்பட்டதா என்று துணிந்துரைத்தற்குத் தக்க ஆதாரமில்லை. பிற்பட்டதென்றே பலருங் கொள்கின்றனர்.

அருணாசல புராணம் 'சைவ எல்லப்ப நாவலர் செய்த கவி கருத்துக்கிசைய கனம் பொருந்திய கம்பெனியாரா லேற்படுத்தப்பட்ட யூநிவர்சிட்டி என்னும் சகல சாஸ்திரசாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய மழவை மகாலிங்கையரவர்களால் செய்யப்பட்ட புதிதான வுரையுடன் நேத்திரப் பாக்கம் சின்னையரால் திருத்தப்பட்டுக் கல்விக்கடல் அச்சுக்கூடத்தில்' முதலாவது பதிப்பிக்கப்பட்டது. இராக்ஷஸ ஆனிமீ.

இம்முதற்பதிப்பில் பாயிரமும், திருநகரச் சருக்கம், திருமலைச்சருக்கம், திருவவதாரச் சருக்கம், திருக்கண் புதைத்த சருக்கம், பாகம் பெற்ற சருக்கம், வச்சிராங்கத பாண்டியன் சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருமலை வலம்புரி சருக்கம், ஆதித்தச் சருக்கம், பிரதத்தச் சருக்கம், பாவந்தீர்த்த சருக்கம், புளகாதிபச் சருக்கம் என்னும் பன்னிரண்டு சருக்கங்களும் காணப்படுகின்றன. திருவிருத்தத் தொகை 586.

பாயிரத்தில் நூல்வரலாறுரைப்பவர்

கருத்துருக விறைவனந்திக் கருள்புரிய நந்தியுமார்க் கண்டற் கோத
விருத்திமறை வியாசமுனிக் கவனுரைக்கச் சூதனுக்கு வியாதன் [சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன் மொழிந்தசிவ புராணங் கோடி
யுருத்திரசங் கிதையுரைத்த வருணைகிரி வளத்தினையா னுரைக்க
லுற்றேன்.

என்று தமக்கு மூல மிருந்த தின்னதெனக் காட்டினர். இதற்குப் பொருளுரைத்த மகாலிங்கையர் "....சிவபுராணங் கோடியாகும். அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் ருத்திர சங்கிதையிற் சொல்லிய அருணசல ஸ்தல மகிமையைச் சொல்லத் தொடங்கினேன்" என்றனர். **ஸ்காந்த புராணத்தில்** ருத்திர சங்கிதை யென்றொன்றிருப்பதாகத் தெரியவில்லை. அப்புராணம் சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளையே யுடையபது. மற்று, சென்ற ஆண்டு [கி. பி. 1928] அருணசல நிவாஸ ஸ்ரீஈச்வர ஸ்வாமிகளால் அருளப்பெற்று ஸ்ரீரமணீய வாணி புத்தகாலயத்தாரால் பிரசுரிக்கப்பட்ட **அருணசல மாகாத்மிய வசனம்** என்னும் நூலின் நூன்முகம் "நான்முகம் பயின்ற நான்மறை முடியில் வான்பதம் வைத்திலகும் அருணசல மகாத்மியத்தை ஸ்காந்தம் மகேச்வர கண்டத்துள் 2060 சுலோகங்கள் கொண்ட 37 அத்தியாயங்களாக வாதராயணமுனிவர் வடமொழியில் வகுத்தனர்" என்றுரைக்கும் சங்கிதையி னுட்பிரிவு கண்டம். இம்மாகேச்சுர கண்டம் எச்சங்கிதையைச் சார்ந்த தென்று புலப்படவில்லை.

அடுத்த செய்யுளில் நாவலர் நூலுள் வருவனவற்றைக் குறிப்பிட்டார்.

அருணைநகர் வளமையுமா லயனகந்தை விடவழல்வெற் பான வாறும்
பொருவில்மக மழித்ததுவு மரனுமையை மணந்ததுங்கண் புதைத்த
[வாறும்
வருமகிடற் றொலைத்ததுவு மிறைவியிடங் கலந்ததுவும் வயிரப் பூணு
னிருவினையை யகற்றியதும் வடகலைதென் கலைவிதியா லிசைக்க
லுற்றேன்.

இச் செய்யுளிற் குறிக்கப்பட்டவை வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் வரையுள்ள சருக்கங்களே.

தீர்த்தச் சருக்கத்தில் நாவலர் விநாயகர் சுப்பிரமணியர் சிவபெருமான் உமாதேவியார் என்னும் நால்வர்க்கும் ஒரு துதி சொல்லி அடுத்த செய்யுளால், தாம் இதுவரை சொல்லியவற்

றிற்கு மூலம் உருத்திர சங்கிதை இனிச் சொல்வதற்கு மூலம் இலிங்கபுராண மெனத் தெரிவித்தார். சொல்லப்போவதைக் குறிப்பிடுபவர்

வன்னி மாமலைத் தோற்றமும் வான்மலைக்
கன்னி பாகங் கலந்தது முன்னமே
சொன்ன தாதலி னுங்க தொழித்ததன்
பின்ன ருள்ள கதைசில பேசுவாம்

என்றார். ஆதலால் திருவண்ணாமலையுண்டான வரலாறும் உமா தேவியார் பாகம் பெற்ற வரலாறும் இலிங்கபுராணத்து முரைக் கப்பட்டனவாகும். இனி,

தீர்த்த மும்மதிற் செய்தரு மங்களும்
வாய்த்த வெற்பின் வலமு மிலிங்கமு
மேத்தி டாதவ ரெய்து மிகழ்ச்சியும்
பார்த்த ரன்பொருள் கொண்டவர் பாவமும்

பந்த மாயறி யாதுசெய் பாவமுஞ்
சிந்தை யார வறிந்துசெய் தீமையும்
முந்தை யோர்க ளொழித்த முறைமையு
மெந்தை நான மகிழ்வு மியம்பவேன்

என்னும் செய்யுள்களாற் குறிப்பிடப்பட்டனவே தீர்த்தச் சருக்க முதலிய சருக்கங்கள். இவ்வாறு நாவலர் தம் புரா ணத்தை இரண்டு பிரிவினதாக்கி உருத்திர சங்கிதை யுரைத்த கதைகளை வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் வரை முதற் பிரி வாகவும் இலிங்க புராண முரைத்த கதைகளைத் தீர்த்தச் சருக்க முதல் இரண்டாவது பிரிவாகவும் அமைத்தார். அருணாசல புராணம் பெருவழக்காயுள்ள நூலாகலின் அதனுள்ளிருக்கும் சருக்கங்களின் சுருக்க முரைப்பது வேண்டாத தொன்று. அவ் வாறே அது பெரிதும் பயிலப்படும் நூலாகலின் அதனுள் காணும் நயங்களையும் அழகுகளையும் விரித்தலும் வேண்டா.

மற்று, இக்காலத்தில் அருணாசலப் புராணப் பிரசங்கங் களில் வல்லாள மகாராஜன் சருக்கம் பிரதான கதையாயெடுத்து விரிக்கப்படுகின்றது. இச்சருக்கம் இக்காலத்துப் புராணப்

பதிப்புக்களுட் காணப்படுமாயினும் முதற் பதிப்பில் காணப்படவில்லை. முன் குறித்த **அருணாசல மகாத்மிய** வசன முடையாரும் சித்தி பெற்றவர்கள் கதைகளைச் சுருக்கியுரைக்குங்கால் வல்லாளராஜன் சரித்திரத்தையும் உரைத்து, அடிக்குறிப்பில் "இச்சரிதம் வடமொழி **ஸ்காந்தத்**திலில்லை. தென்மொழி **அருணாசல புராண**த்தில் மட்டுமே காணப்படுகிறது" என்று எழுதி வைத்தார். **அருணாசலபுராண**த்தின் முதற்பதிப்பிலும் அது காணப்படவில்லை யென்பது அவர்க்குத் தெரிந்தால் உரைத்திருப்பார். முதற் பதிப்பிலில்லாத சருக்கம் இக்காலத்துப் பதிப்புக்களிற் காணப்படுதற்குக் காரணமென்ன வென்று அறியுநோக்கத்தோடு முதற்பதிப்புக்குப் பின் தோன்றிய பல பதிப்புக்களை யான் ஆராயலுற்றேன். கி. பி. 1873-ல் வெளிவந்த பதிப்பு, திருத்தணிகை விசாகப் பெருமாளையரவர்கள் மாணுக்கரி லொருவராகிய திருவண்ணுமலை அல்லமாப்பிரபுவையர் சகோதரர் அருணாசலவையரால் முன் பதிப்பித்த பிரதிக்கிணங்கப் பரிசோதித்து இரண்டு படங்களுடன் வெளிவந்தது. அவ்வாண்டிலேயே, திருவெண்காடு ஆறுமுக சுவாமிகளால் பார்வையிடப்பட்டு ஒரு பதிப்பு வெளி வந்தது. இவ்விரண்டு பதிப்புக்களும் முதற் பதிப்பின் பிரதிரூபங்களே. கி. பி. 1874-ல் அருணாசலவையரால் முன் பதிப்பித்த பிரதிக்கிணங்கப் பரிசோதித்து வெளியிடப்பட்டதாக ஒரு பதிப்புத் தோன்றியது. பாகம் பெற்ற சருக்கம் பார்வதியார் இடப்பாகம் பெற்ற சருக்கம் என மாற்றப்பட்டதை யன்றி வேறு பேதங்களில்லை. ஆயினும் இப்பதிப்புக்களிலெல்லாம் உரை மழவை மகாலிங்கையர் செய்த தென்பது காட்டப்படவில்லை. கி. பி. 1886-ல் ஒரு பதிப்பு வெளிவந்தது. அதுவும் உரை செய்தார் பெயரைக் குறிப்பிடாமல் 'சைவ எல்லப்ப நாவலர் அருளிச்செய்த அருணாசல புராணம் மூலமும் உரையும்' என்னும் தலைப்பையுடையதாய், 'இவை வேதாரண்ணியம் ம-ா-ா-ஸ்ரீ திரு. சாம்பசிவ முதலியார் பரித்துப்பேடு கணபதி நாயகரவர்கள் குமாரர் ம-ா-ஸ்ரீ கந்தசாமி நாயகர் இவர்கள் கேட்டுக்கொண்டபடி சில கருத்துகளும் வல்லாள மகாராஜன் சருக்க

மும் வெகு காலமாய்க் கைசோர்ந்து போயிருந்து தற்காலம் ஆதியோடந்தமா யகப்பட்டிருக்கிற ஏட்டுப்பிரதியின் பிரகாரஞ் சேர்த்துச் சருக்கங்கடோறும் படங்களமைத்துப் பாரிப்பாக்கம் ம-ா-ா-ஸ்ரீ முனியப்ப முதலியாரால் ஆராய்ச்சி செய்த பிரதிக்கிணங்க, திருக்கழுக்குன்றத்துக் கடுத்த தாழம்பேடு கிராமம் முத்து செல்லப்ப நாயகரவர்கள் குமாரரும் இச்வச்சுக் கூடத்தலைவர் மைத்துனருமாகிய ம-ா-ஸ்ரீ அருணகிரி நாயகரால் திரு. சுப்பராய தேசிகரவர்களது கல்விப் பிரவாகவச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. இவ்வச்சுக்கூடத்தலைவர் திரு. பச்சையப்பெருமாள் நாயகர்' என்னும் விவரங்களோடு விளங்குகிறது. அச்சிட்டுவரும் புத்தகங்கள் என 'முன் அச்சிட்ட வல்லாளராஜன் விலாசம், வல்லாளராஜன் கதை, நூதனமாய்த் தெலுங்கில் மொழிபெயர்த்த வல்லாள ராஜன் அக்ஷதானம்' குறிக்கப்பட்டுள்ளன. வல்லாள மகாராஜன் சரித்திரத்தில் ஒரு கிளர்ச்சி யேற்பட்ட அவ்வாண்டில் வல்லாள மகாராஜன் சருக்கம் அருணாசலபுராணத்தில் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. வல்லாளராஜன் வன்னி குலத்தவன் சேரன் மரபிலுதித்தவன் அருங்குணங்கள் பலவாய்ந்தவன் அருணாசல நகரத்தைத் தலைநகராகக்கொண்டு அறு நூறு ஆண்டுகட்குமுன் அரசுபுரிந்தவன் என்பர் வசனமாகாத்மிய முடையார். அவன் சரித்திர முரைக்கும் சருக்கம் எல்லப்ப நாவலர் செய்து மறைந்திருந்து பின் அகப்பட்டதா அன்றிப் பிற்காலத்துப் புலவரொருவர் செய்து சேர்த்திட்டதா என்பது ஆராயற்பாற்று.

வல்லாள மகாராஜன் சருக்கம் சேர்க்கலுற்றோர், 'அருணை நகர், என்னும் சருக்க விவர முரைக்குஞ் செய்யுளினிறுதியடி அச்செய்யுளைப் பாயிரத்திற் கிறுதியாகத் தோற்றச் செய்வதால் அதனை இருவினையை யகற்றியது மற்றுமுள சரிதையெலா மியம்பு வேனே எனமாற்றி,புதிய சருக்கத்தைக் குறிப்பிட வேண்டி

அங்கிகுல மோங்கவரு வல்லாள பூபன்ற னரிய தொண்டுந்
துங்கமிகுந் தீர்த்தமுடன் றிருமலையை வலம்புரியும் சுடரோன் பேறும்

பொங்குபிர தத்தனொரு வினைதீர்த்த வாறுபுள காதி யாவு
மிங்கிதஞ்சேர் வடகலையி லிருந்ததனைத் தென்கலையா லியம்ப
[லுற்றேன்

என்று பின்னுள்ள சருக்கங்களை யெல்லாங் குறிப்பிட்டார். வல்லாள மகாராஜன் சருக்கம் வச்சிராங்கத பாண்டியன் சருக்கத்திற்கும் தீர்த்தச் சருக்கத்திற்கும் இடையிற் சேர்த்தனர். சேர்ப்பவர் தாம் சேர்ப்பதையே எண்ணி, நாவலர் தம்நூலை இரண்டு பிரிவாகப் பிரித்ததையும் அவ்வாறு பிரித்ததற்கேற்பப் பாயிரத்தில் உருத்திரசங்கிதைக் கதைகளின் விவரமே குறித்துப் பின் தீர்த்தச் சருக்கத்தில் வேறு துதிசொல்லி இலிங்கபுராணக் கதைக ளின்னவெனக் குறித்ததையும் மறந்து, நூல் முழுவதிற்கும் சருக்க விவரம் பாயிரத்திறுதியிலேயே யுரைத்தார். தீர்த்தச் சருக்கத்தில் முதலாறு செய்யுள்களையும் நீக்கிப் பதிப்பித்திருந்தாராயின் அது சிறிது பொருத்தமாயிருக்கும். வல்லாள மகாராஜன் சருக்கத்திற் காணப்படுஞ் செய்யுள்களின் நடைக்கும் மற்றைச் சருக்கங்களிலுள்ள செய்யுள்களின் நடைக்குமுள்ள பேதத்தைக் கருத்தூன்றி வாசிப்போர் எளிதிற்றெரிந்து கொள்வர். அச்சருக்கத்திற் குரை மழவை மகாலிங்கையர் செய்ததன்று என்பது இங்குச் சொல்லவேண்டா. முதற்பதிப்பிற் காணப்பட்ட 586 செய்யுள்களோடு வல்லாள மகாராஜன் சருக்கம் செய்யுள் 60-ம் பாயிரத்திறுதியிற் சேர்ந்த செய்யுள் ஒன்றும் ஆகப் பதிப்பிற் காணப்படும் செய்யுள்கள் 647.

இனி, இப்பதிப்பின் [கி. பி. 1886] பின் கி. பி. 1887-ல் இயற்றமிழாசிரியர் அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் மருகர் அப்பன் செட்டியாரவர்களால் பரிசோதிக்கப்பட்ட பதிப்பொன்று வெளிவந்தது. அவ்வாண்டிலேயே மழவை மகாலிங்கையர் செய்த உரை யென்று கண்டு ஒரு பதிப்பு, சென்னைத் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட 'பிரசிடென்ஸ் காலீஜ்' என்னும் சர்வகலாசாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய திருத்தணிகை விசாகப்பெருமா ளையவர்கள் மாணுக்கரி லொருவரான பு. அப்பாசாமி முதலியாராலும்

இராயவேலூர் வேலு முதலியாராலும் பார்வையிடப்பட்டு வெளி வந்தது. இப்பதிப்பில் வல்லாள மகாராஜன் சருக்க நடை சிறிது திருத்தமுள்ளதாகக் காணப்படுகிறது. ஆயினும் வல்லாள மகாராஜன் சருக்கம் சைவ எல்லப்ப நாவலர் செய்த அருணசல புராணத்திலுள்ளதன்று. பின் எழுதிச் சேர்க்கப்பட்டதென்பதே தேற்றம்.

---

# மருத்துவம்

[திரு. சீவரத்தினமவர்கள்]

திருத்தகு ஆயுள்நூற் செழுங்கடலுரைசான்ற மருத்துவப் புலமையோர் மணிமுகப் பார்வைக்குப் பொறித்திடும் வேண்டுகோள்.

அருங்கலை நிறைந்த செழுந்தமிழ்ப் புலவோர்க்கு:—

“உந்தி தொக்கல் உவாததம் வெண்லிங்கம்
கந்தமலர்ப் பெடைய மகனக மோரிடை
வந்த பிரணவம் வன்னித் தியாகரி
சந்தில் வெந்து தானும் மஞ்சாடி
அரைமுன லசாமம் அதிக நீர்பிடம்
விறவி தேனிலுண்ணல் குட்டமும் வீக்கமும்
பிளவையற்ற சூலையும் முன்பொடி யானது
குறையறத் தீர்க்கும்”

என்றமருத்துவச் செய்யுளுக்கு இருவர் தத்தம்முள் இரு வேறுபடப் பொருள் கூறியுள்ளார். அவ்விருவர் மொழிந்த உரைகளைத் தனித்தனி இதன் கீழ்த் தருகுதும். அவற்றை, அறிவிற் சிறந்த மருத்துவப் புலவோர், அன்புடன் நோக்கி, அன்னார் கூறிப் பொந்த இரு உரைகளுள்ளும், உண்மைப் பொருளை நுவலும், செம்மையான உரையாதென்பதை இச்

"செல்வி" வாயிலாக வெளியிடுமாறு, அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்றி இருவருரையும், பிழையானவெனின், மேற்கு றித்த அம்மருத்துவச் செய்யுளுக்கு உண்மைப் பொருளை உணர்த்தும் பொருள் யாதென்பதை மருத்துவப் புலவோர் இனிதாராய்ந்து வெளியிடுவார்களாயின், அந்நன்றி, இத் தமிழகத்தார்க்கு ஓர் ஒப்புயர் வில்லா அற்புத அறச்செய லாகும்.

அவ்விருவருரையுள் ஒருவருரை வருமாறு :—

1. உந்தி-பச்சைநாவி
2. தொக்கல்-ரசம் [வேண்டும்)
3. உவாகதம்-கெந்தகம் (உவாததம் என்றிருத்தல்
4. வெண்லிங்கம்-சாதிக்குப்பிலிங்கம்
5. கந்தமலர்-அரிதாரம்
6. பெடையம்-மனோசிலை
7. கனகம்-மிழகு
8. பிரணவம்-ஓமம்
9. வன்னி-கொடிவேலி
10. தியர்கரி-அரிசித்திப்பிலி
11. சந்தில்வெந்து-வெண்பாஷணம்

அரைபுநால்சாமம், என்றிருக்க வேண்டியது.

மற்ற உரை வருமாறு:—

உந்தி-தொக்குக்-கல்-கடலை ஆடையாகப் போர்த்த கல். இது அண்டக்கல் எனப்படும். இதற்குரிய பரியாய நாமங்கள், வெண்கல், சுண்ணும்புக்கல், ஆதியனவாம். பெரும்பான்மை, பூமிநாதம் விளையு மிடங்களில், இதனைக் காணக் கூடுமெனவும், அந்த இடத்தைச் சவர்க்காரக் குழியெனவும், அநுபவம் நிறைந்த சித்தர்பலர்

கூறுகின்றனர். கடலை ஆடையாக உடுத்த பூமியென்ற பொருள் வந்தமையை வற்புறுத்த வேண்டில்,

"கடல் விளிம்புடுத்த நெடு நிலவுலகத்து" என்ற சான்றோர் வாக்கே இதற்குப் போதிய புட்பக் கோதையா மென்க. அதுவுமன்றி அச்செய்யுளில் "பூமி" என்னுஞ் சொல் வெளிப் படையாகவிராது குறிப்பாக நின்று பொருள் தந்தமையை, ஆன்றோர் அருளிய செய்யுள்களிற் காண்க. ஈண்டு அதை விரிக்கிற் பெருகும்.

உவா - கதம் வெண் — கருமையுள்ள நாகம் கருநாகம் (காரீயம்) வெள்ளியரசம். வெண்என்றவிடத்து நேரே ரசத்தைக் குறிப்பதற்கு,எடுத்துக்காட்டு வருமாறு:— ரசத்திற்கு, சுந்தரம் என்றோர் பெயருமுண்டு. சுந்தரம், என்பது வெண்மை, அழகு என்னுஞ் சொற்களைக் குறிக்குமோர் சொல்; இதனை, எம் சைவ குரவர், திருஞான சம்பந்த சுவாமிகள் மணிவாய் மலர்ந்த திருநீற்றுப்பதிகத்தில்,

" மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு"

எனவருந் தேவாரத்தால் அறிந்து மகிழ்க. இன்னும்

"சூதமென்ற பாஷாணம் சொல்லக் கேழு
சுந்தரமாஞ் சொற்குறியாந் தூமமாகும்......"

என்று போக முனிவர் அருளிய நிகண்டிற் கண்டு தெளிவுறுக.

லிங்கம்-சாதிலிங்கம்

கந்தம்-கந்தகம்

மலர்ப்பேடு, வெண்டாமரையில் வீற்றிருக்கும் சரசுவதியின் பெயரைத் தனக்கு வரித்துக்கொண்ட மனோசிலை. ஈண்டு மனோ

சிலை என்ற பெயர் சரஸ்வதியின் பெயரினின்றும், வந்தவழி கூற வேண்டில்,

"நான்முகன் தேவி நலங்குஞ் சரசோதி
வான்முக வாணி மருவிய வெள்ளைச்சி
தாமுக வாக்கி, தாமரை வாசினி
கோமுக நாமக் கொடுமனோ சிலைக்குமே"

என்று தவத்திற் சிறந்த சட்டமுனிவர் கூறிப்போந்தவாற்றால் கண்டுணர்க.

அயம்-கருந்தாது (இரும்பு)
கனகம்-தங்கம்
அதீதநீர் கடுங்காரச் செயநீர். அதிதீரநீர் (குருஜெயநீர்)
இன்னும், மேற்கூறிய சரக்குகள்; நாதவிந்து
(உப்பு - புளி)

என்ற நிரையை நோக்குமிடத்து, அவைகளுஞ் சாலப் பொருத்தமுறுவதையும் ஈண்டுச் சிறுக நுவல்வாம். மருந்து முறையில், சரக்குகள், உப்பு, புளி, நேர்படுகின்றனவோ, என அவற்றை வைத்தியர் சிறிது கவனித்துக்கொள்ளுதல், இன்றியமையாததா மென்பதை,

"......உப்பொடு புளிசேர்ந்து உரிசையாகும், உப்பென்று புளியென்று உரைத்துப் பாரே"

என்று போகமுனிவர் கூறியுள்ளார்.

மேற் கூறியவற்றுள், அண்டக் கற்சுண்ணம், சாதிலிங்கம், கந்தகம், மனோசிலை ஆதிய நான்கும், புளிச்சரக்காமென்றும், எஞ்சிய கருநாகம், ரசம், அயம், தங்கம் என்ற நான்கும் உப்புச் சரக்கா மென்றும் அறியக்கிடக்கின்றன.

"மலர்ப்பேடு" இந்தச்சொல், முறையே, இலக்குமியையும், சரஸ்வதியையும் கருதத்தக்க அருத்தம் அமைந்திருப்பினும், மேற் கூறிய தங்கத்திற்குப் புளிச் சரக்காக வருவது, மனோசிலையானதினால், மலர்ப்பேடு, மனோசிலை யென்று துணியப்பட்டது.

இன்னும், உவாகதம்; இது அமாவாசையை யொத்த கருநாக மென்றும், பூரணசந்திரனை நிகர்த்த வெண்நாக மென்றும் இரு பான்மையானும், பொருள் கொள்ளத்தக்கதாக விருப்பினும், அவற்றுள் கருநாகமே, குட்டம், சூலை ஆதியாம் பிணிகளைக் கடிந்தொதுக்க வல்லதா மாதலின், ஒருவாறு கருநாகமென்று உறுதி கொள்ளப்பட்டது. அங்ஙனமே, ரசமுங் கோடற் குரியது.

"உந்திதொக்கல்..........." என்ற பாட்டில், இரண்டாமடி யாகிய "கந்தமலர்ப் பெடைய மகனகமோரிடை" என்றது முறையே, கந்தமலர்ப்பேடயம் கனகமோரிடை" என்றே யிருத்தல் சாலப் பொருத்த முறும். எனவரும் இருவருரை களையுங் கண்டுகொள்க.

---

# வாகைத் திணை

[இளவழகனார்]

அஞ்செவி நிறைய ஆலின, வென்றுபிறர்
வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி வலன்ஏர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப ........
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

(முல்லைப்பாட்டு, அகூ - கூஉ, ஈங)

'பகைவர்களைப் போரில் வென்று அவர்கட்கு இன்றியமை யாதனவான புலங்களைக் கவர்ந்துகொண்ட வெற்றியினால், திரண்ட பெரிய படைகளோடு வெற்றிக்கொடி பிடித்து அவ் வெற்றியைத் தோற்றுவித்துக்கொண்டு கொம்புஞ் சங்கும் முழங்க விரைந்து வருந் தலைவருடைய தொழின் முனைப்பு விளங்கும் உயர்ந்த தேரிற் பூட்டப்பட்ட குதிரைகள் தலைவியின் செவிகள் நிறையும்படி ஆரவாரித்தன.'



வாகைத் திணை

'மா ஆலின' வென்க. தலைவி இருக்கும் மாளிகையருகில் வருதலால், மா ஆலினவென்பது. பிறர், பகைவர். உயரி, இகர விகுதி பெற்று வந்த செய்தென் வாய்பாட்டு வினையெச்சம். ஏர்பு, செய்புவென் வாய்பாட்டு வினையெச்சம். 'வினை விளங்கு மா' வென்க. அகஞ்செவி, அஞ்செவியெனத் திரிந்தது. இஃது 'அகமென் கிளவிக்கு' * என்பதனால் முடித்தற் பாலது. இஃது 'உட்செவிக' ளென்று பொருள் படுதலின், பண்புத்தொகையென்க. ஆலின, ஒலித்தன; ஆலுதல், ஒலித்தற் பொருட்டாதலை,

"வெண்ணுதற் கம்பு ளரிக்குரற் பேடை
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலும்"†

என்னும் ஐங்குறு நூற்றினுங் கண்டுகொள்க. இதன்கண் வேந்தனது வெற்றித் தோற்றம் விளங்குதல் காண்க.

பகைமேற் சென்ற அரசன் நால்வகைப் படைகளோடும் பொருகளங் குறித்து ஊக்கமாய்ப் பொருது பகையரசனை அவன் றன் படைகளோடு கொன்று குவித்து வெற்றியெய்தினான். அரசன் தான் கொண்ட கொள்கையை மிகுதிப்படுத்தி வெற்றி கொண்டமையின், இது 'வாகைத்திணை' யெனப்படும். எவருந் தத்தங் கொள்கையை மிகுதிப்படுத்துக் கொள்ளுதலே 'வாகை யொழுக்க' மெனப்படு மென்பது,

'தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப'‡

வென்று தொல்காப்பியனார் கூறும் வாகைத்திணை நூற்பாவி னாற் றெளியப்படும். ஆசிரியர் இந்நூற்பாவில் அரசரது கொள்கை மிகையைப் பற்றிமட்டுங் கூறாமல், '**தத்தங் கூற்றைப் பாகுபட** மிகுதிப்படுத்த' லென்று ஏனையோரது கொள்கை மிகையைப் பற்றியும் எடுத்தோதுதல் இங்குப் பெரிதும் உற்று நோக்கற் பாலது. அரசரல்லாத பார்ப்பனர் முதலான ஏனை

* தொல், புள்ளிமயங், உ௰.
† ஐங்குறு, கூ: ௫ ‡ தொல், புறத், கக.

யோரின் கொள்கை மிகையைப்பற்றியும் இவ்வாகைத்திணையில் அடக்கியோதுதலே ஆசிரியர்க்குக் கருத்தா மென்பது,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்,
நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்,
பாலறி மரபின் பொருநர் கண்ணும்,
அனைநிலை வகையோடு ஆங்குஎழு வகையின்
றொகைநிலை பெற்றது என்மனார் புலவர்"*

என்று இவ் வாகைத்திணைப் பரப்பையெல்லாம் ஏழுவகை யாகத் தொகைப்படுத்து மேல் நூற்பாவிற் கூறுமிடத்துப் பார்ப்பனரையும் வணிக வேளாளரையும் அறிவரையுந் தாபத ரையும் பொருநரையும் பிறரையும் அவர் எடுத்துக்காட்டி அவரவர் தங் கொள்கைகளின் மிகுதிப்பாடுகளை விளக்கிச் செல்லு தலாற் றெளிவாய்ப் புலப்படுதல் காண்க. வெட்சித்திணை முதல் தும்பைத்திணை யீறாக அரசருடைய ஒழுக்கங்களையே கிளந்து ரைத்து வந்த ஆசிரியர் இவ் வாகைத்திணையை மட்டும் ஏனை யோர்க்கும் உரியதாகவைத்து உரைகிளத்தலால், 'ஏனைத் திணை களெல்லாம் அரசர்க்கு மட்டுமே உரிய; இத்திணை யொன்றுமே எல்லார்க்கு முரித்தென்ப' தன்று. எல்லாத் திணைகளும் எல் லார்க்கு முரிய. தலைமைபற்றித் தும்பையீறாக உரைத்த திணை களிலெல்லாம் அரசரொழுக்கங்களை எடுத்துக் கூறினர். மற்று, எல்லாத்திணைகளும் எல்லார்க்கு முரிய வென்னும் உண்மையை விளக்குதற்கு இவ்வாகைத்திணையை இடனாக்கொண்டு ஏற்றவை உரைதந்து உய்த்துணரவைப்பா ராயினரென் றறிந்துகொள்க. ஆனாற் புறப்பொருள் வெண்பாமாலை தானெடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப முன் பின் றொடர்புகண்டு அரசரது கொள்கை மிகையைப்பற்றிமட்டும் எடுத்து வாகைப்பகுதியில்,

* தொல், புறத், ௨௰.

'இலைபுனை வாகை சூடி இகன்மலைந்து
அலைகடற் றானை யரசட் டார்த்தன்று'*

என்று வாகை யுரையாநின்றது. தொல்காப்பியனார் ஏனை யோர் கொள்கை மிகைகளையும் இதுவே இடனாக அடக்கிக் காட்டினாராகப், புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் அங் ஙனம் பிறர்தங் கொள்கை மிகைகளை வெளிப்படையாய் எடுத் துக்காட்டாமல் அரசரது மிகையைமட்டும் விளக்கிக்காட்டினார். இவ்வளவே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கும் வெண்பா மாலையார் கருத்துக்குங் காணப்படும் வேறுபாடாமல்லது, வாகையொழுக்கம் இன்னது என்பதைப்பற்றி அவ்விருவர் கருத் துக்களுள்ளுங் காணப்படும் வேறுபாடு வேறு சிறிதுமில்லை. மற் றுத் தொல்காப்பியனார் வாகையிடனே யிடனாக அரசரல்லாத ஏனையோர் மிகைகளையும் எடுத்துக் கூறுதல்போலவே, வெண்பா மாலையாரும் அங்ஙனமே இயைத்துக் கூறுங் கருத்துடைய ராதல், அரசவாகை மட்டுமன்றிப் பார்ப்பனவாகை, வாணிக வாகை, வேளாண்வாகை, பொருநவாகை, அறிவன் வாகை, தாபதவாகையெனப் பிறர்தங் கொள்கை மிகைகட்குந் துறை கள் வகுத்து விளக்கங் கூறுதலின்வைத் தினிதறியப்படும். ஆதலால், தொல்காப்பியத் தேவர்க்கும் வெண்பாமாலை யாசிரி யர்க்கும் இவ் வாகைத்திணைப் பகுதியில் ஏதுங் கருத்து வேற் றுமையும் முரண்பாடுங் காணப்படா வென்பது நினைவிற் பதிக் கற்பாற்று. இங்ஙன மிவற்றை நூற்போக்குகட் கேற்பப் பகுத் துப் பொருத்தி யுணரமாட்டாதார், தாங் கருதியவாறே இவை தம்மில் வேற்றுமையுள்ளதுபோல் உரை காட்டுவர். அது மேல் விளக்கிக்காட்டிய ஒற்றுமையுரையினாற் போலியா யொழிதல் கண்டுகொள்க வென்பது.

இனி, ஆசிரியர் ஏனையோர் செயல்களையும் விளக்குதற்கு வாகைத் திணையையே இடனாகத் துணிந்தா ரென்பது என்னையோ வெனிற் கூறுதும்; வாகை யென்பது கொள்கை கள் ஆற்றன் மிகுந்து வெற்றியுறுதலைக் குறிக்கும். எனவே

* புறப்-வெ, வாகை, க.

கொள்கைகளின் வெற்றிப் பேறே வாகைத் திணைக்கண்டுத்து விளக்கற்பாலதாம். கொள்கைகளும், அக் கொள்கைகளை யுடைய ஒழுக்கங்களுமென மக்களின் நிகழ்ச்சி இருவகைப்படும். இவ்விரண்டனுட் கொள்கைகளே முதன்மையாவன. கொள்கைகள் பற்றியே எவர்க்குஞ் செயல்கள் நிகழும். சில கொள்கைகட்குரிய செயல்கள் விளக்கமாய்த் தோன்றுமாட்டாவாய் நுட்பமாகவே நிகழும்; சில விளக்கமாய்த் தோன்றுவனவாய் உருக்கொண்டு நிகழும். அரசன் தனது ஆற்றலை மிகுத்துக்கொள்வதாகிய வாகைக் கொள்கையைப் பற்றி அவனுக்கு நிகழும் ஆரவாரித்தல் முதலான வெற்றிச் செயல்கள் விளங்கித் தோன்றுவனவாய் உருக்கொண்டு நிகழ்தலும், தவம் புரிவார் தமது தவவலிமையை மிகுத்துக்கொள்வதாகிய வாகைக் கொள்கையைப் பற்றி அவர்க்கு நிகழும் நினைவொருமை செய்தல் முதலிய வெற்றிச் செயல்கள் அங்ஙனம் விளங்கித் தோன்றமாட்டாமல் நுட்பமாய் நிகழ்தலும் இவ்வுண்மைகளை நன்கு புலப்படுத்தா நிற்கும். ஆதல்பற்றியே, விளங்கித் தோன்றுவனவாய், எடுத்து விளக்குதற்கு எளிதாவனவாய் நிகழும் அரசருடைய வாகைச் செயல்களையே இவ் வாகைத் திணைக்கண்ணும் பெரும்பான்மையும் ஆசிரியர் விரித்துரைத்து, அங்ஙனந் தோன்றுதற்கும் விளக்குதற்கும் எளியவல்லவாய் நிகழும் ஏனையோர் கொள்கைகளின் நுட்பச் செயல்களைச் சிறு பான்மையாய்ச் சுருக்கியே கூறித் துறைகள் நிறுத்துவாராயினர்.

நுட்பச் செயல்களெல்லாம் முற்றும் நிறைவாகி வெற்றியெய்திய பின்னரே இச்சிறிதேனும் எடுத்துரைக்குந் தகுதியுடையனவாம். அவ்வாறாக, அவைதாம் நிறைவெய்திவரற்கு முன்னெல்லாம், இன்னும் நுணுக்க மிக்கனவாய் நிகழாநிற்குமாகலின், அவை எவ்வாற்றானும் அந்நிலையில் எடுத்துரைக்கும் பெற்றியன வல்லவென்க. அந்தணர் வணிகர் வேளாளர் முதலாயினார் தங் கொள்கைகட்கும் அரசர் தங் கொள்கைகளிற் போல வெட்சி முதலான திணையொழுக்கங்கள் போல்வன நிகழ்தலுண்டு. அவையெல்லாம் நுணுக்கத்தினும் நுணுக்கம் மிக்கு எடுத்துரைத்தற்குரிய செயற் பரப்பும் நூற்பொருணீர்

மையும் புறப்பொருண் முதன்மையு மில்லாமையின் ஆசிரியர் அவற்றை யெல்லாம் ஒவ்வொரு திணைக்கண்ணும் எடுத்திணைத் துரையாராய், வாகை முதலான திணைகளிற் கூறுதல் கொண்டு உய்த்துணரவே வைத்தா ரென்க. முற்றும் நிறைவாகி வெற்றிப்பேறு காட்டும் வாகைத் திணைக்கண்ணேயே சிறுபான்மையாய்ச் சுருக்கியே விளக்குதற்குரிய நுண்ணியல்பினவாய் நிகழும் பார்ப்பனர் முதலியோர் கொள்கைகளின் நுட்பச் செயல்கள், முற்றும் நிறைவாகாமல் நுணுக்கம் மிக்கு வெட்சி முதலான திணைகள்போல்வனவற்றுள் நிகழ்ந்து வருங்கால் அவை ஒரு சிறிதும் எடுத்துரைக்கப்படும் நீரனவல்ல வென்பது கூறல் வேண்டா வென்க.

இனித் 'தாவில் கொள்கை' யென்னு நூற்பாவால் வாகையிலக்கணங் கூறிய தொல்காப்பியனார், பல்வகை மரபுடையராய் உலகியல் நிகழ்த்தும் மக்களின் வாகையியல்புகளை 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமு' மென்னு நூற்பாவினால் தொகுத்துச் சுட்டிப் பின்னரவற்றின் விரிவுகளைக் 'கூதிர்வேனி' லென்னு நூற்பாவினால் வகுத்துக் காட்டுகின்றார். எனவே 'அறுவகைப்பட்ட' வென்னு நூற்பாவும், கூதிர்வேனி' லென்னு நூற்பாவும் முறையே தொகைவகை நூற்பாக்களாகு மென்க. இனி ஆசிரியர் தொகை நூற்பாக்கண், உலகியலொழுகும் மக்கள் தாந்தாமும் ஒரு நெறிப்பட்ட ஒழுகலாறுடையராய் மேற்கொண்டு நிகழ்த்திவந்த தொழிற் கூறுபாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைக்கின்றார். அங்ஙனம் உரைக்கும்வழிப் பார்ப்பனர் மரபு, அரசர் மரபு, வணிகவேளாளர் மரபு, அறிவர் மரபு, தாபதர் மரபு, பொருநர் மரபு, வேறு பிறர் மரபு என்று ஏழு வகைகள் தொகுத்துரைக்கப்படுகின்றன. இங்கு மரபெனப்படுவது அவரவருந் தொன்றுதொட்டு வழக்கமாய் மேற்கொண்டு செய்துபோதருந் தொழின் மரபினை யுணர்த்துகின்றது. இனி இம்மரபுகளின் விளக்கம் உரையாசிரியன் மாரான் உரைக்கப்படுவது வருமாறு:

பார்ப்பனர்க்குரிய அறுவகைத் தொழின் மரபுகள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன.

இவைதாமே அப் பார்ப்பனர்க்குரிய தொழின் மரபுகளென்று,

> "ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
> ஈதல் ஏற்றலென்று ஆறுபுரிந் தொழுகும்
> அறம்புரி அந்தணர்" *

என்று **பதிற்றுப்பத்தும்** எடுத்தோதுவதாயிற்று. இனி அரசர்க்குரிய ஐந்து தொழின் மரபுகள் ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதலென்றார் **இளம்பூரணர்**; இவற்றுட் 'படை வழங்கு'தலை நீக்கி அதற்கு ஈடாகத் 'தண்டஞ் செய்த' லென்பதொன்று சேர்த்துரைப்பர் **நச்சினார்க்கினியர்.** வணிகர்க்குரிய அறுவகைத் தொழின் மரபுகள் ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் என்பன வென்றும், வேளாளர்க்கு உரிய அறுவகைத் தொழில்கள் உழவு, உழுவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தரல், வேட்டல், வேதமொழி கல்வியோதல் என்பனவென்றும் ஆசிரியர் இளம்பூரணர் உரைப்பர். ஆனால் நச்சினார்க்கினியரோவெனின், உரையாசிரியர் வணிகர்க்கு உரைத்த மரபுகளை உரைத்தவாறே ஒத்துக்கொண்டு, வேளாளர்க்குக் கூறிய மரபுகளின்மட்டுங் கருத்துடம்படாமல் வேதம் ஒழிந்தன ஓதலும், ஈதலும், உழவும், நிரையோம்பலும், வாணிகமும், வழிபாடுமெனத் தாம் வேறு ஆறு உரைப்பர். வேளாளர்க்கு வழிபாடு உண்டென்று மேலும் வற்புறுத்துரைக்கும் உரைப்பகுதியொன்று நச்சினார்க்கினியருரையில் வருகின்றது. அதன்கண் அவர், 'இனி வேளாளர்க்கு வழிபாடு கொள்ளாது பெண்கோடல் பற்றி வேட்டல்உளதென்று வேட்டலைக் கூட்டி ஆறென்பாருமுளர். வழிபாடு இருவகை வேளாளர்க்கும் உரித்து. இனி வேட்டலைக் கூட்டுவார் அரசராற் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்பர்' என்று உரையாடுவர்.

இனி அறிவர்க்குரிய மரபினை ஆசிரியர் இளம்பூரணர் மழையும் பனியும் வெயிலுமென்னும் மூவகைக் காலங்களிலும்

---

* பதிற்றுப், ௨௪.

நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மின்வீழ்வும் கோணிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துக் கூறுதலென்று கூறி, இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களின் நிகழ்ச்சிகளையும் அறிந்து கூறலென் றுரையாகிற்கும் பிறர் மதத்தை மறுப்பர். நச்சினார்க்கினியர், இறப்பு முதலான முக்காலங்களையும் அறிதலே அறிவன் மரபென நாட்டுவர். தாபதர்க்குரிய மரபுகள் நீராடல், நிலத்திடைதல், தோலு டுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, கான் உணவே கோடல், தெய்வவழிபாடு முதலியன செய்தலென்னும் எட்டுவகை நிகழ்ச்சிகளா மென்பது இளம்பூரணர் கோட்பாடு; நச்சினார்க்கினியர் ஊணசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வா ளாமை என்று தவம்புரிவார்க்கு ஓரெட்டும்; இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்று தவஞ்செய்து நினைவொருமை செய்வார்க்கு மற்றோ ரெட்டுமாகத் தாபதரை இருவகைப்படுத்து மரபுரைப்பர்.

பொருநர்க்குரிய மரபு வாளானுந் தோளானும் பொரு தலும் வேறலுமென்று இளம்பூரணருரையிற் காணப்படு கின்றது; 'அனைநிலை வகையோ' டென்று தொல்காப்பியர் ஏழா வதாகக் கூறும் மரபு வாளானுந் தோளானும் பொருநர் வேற லன்றிச் சொல்லானும் பாட்டானுங் கூத்தானுஞ் சூதானுந் தகர்ப்போர் பூழ்ப்போர் என்பவற்றானும் பிறர் வெல்லுத லென்று அதனிகண் எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆனல் நச்சினார்க்கினியத்தில், இவ் வினைத்தையும் பொருநர்க்குரிய மர பாகவே வைத்துரைத்துத், தொல்காப்பியர் கூறிய 'அனைநிலை வகையோ'டென்னும் மரபு, மேலெல்லாங் காட்டிய பார்ப்பனப் பக்கம் முதலான அறுவகைப் பக்கங்களினுந் தோன்றி அவற் றுக்கு வேறுபட்டுக் காட்டும் பிறர்மரபுக ளாகுமென்று உரை நிறீஇ விளக்கப்பட்டிருக்கின்றது. அது, பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகைப் பகுப்பினுள்ளுங் களவினுற் பிறந்த மக்கள் தத்தங் கோட்பாட்டை மிகுத்துக்கொள்

வதான வாகையெனவும், அறிவு முயற்சியானன்றித் தவமுயற்சி யான் முக்காலமு முணரும் அறிவரது வாகையெனவும், அன்னூர்க்கு மாணுக்கராகித் தவமொன்றுமே யுடையரான தாபதரது வாகையெனவும், போர்க்களத்துப் பொருநரை பொப்பவே தகர் வென்றியும் பூழ்வென்றியுங் கோழிவென்றியும் முதலியன உடையரான பொருநரது வாகையெனவுங் கூறப்படுவதாகும். ஆசிரியர் தொல்காப்பியனூர் எல்லா மக்கட்குந் தொழின் மரபு தொகுத்துரைத்தியற்றிய 'அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்க' மென்னு நூற்பாவுக்கு உரையாசிரியன்மார் விளக்கிக் காட்டிய உரை இவையேயாம். இனி இவ் உரைக் கூறுபாடுகளெல்லாம் ஆசிரியர் தொல்காப்பியனூர் கருத்துக்கு இசைவான உண்மை யுரைக் கூறுபாடுகள்தாமா வென்பது ஈண்டு ஒரு சிறிது ஆராய்ந்து முடிபுரைத்தலும் வேண்டும். இவைதாம் ஆராய்ச்சியிலிருத்தலின் ஏற்புழித் துணிந்து விளக்குவேம்.

இனி ஆசிரியர் அரசரது வாகைக்கு வகுத்த துறைகள்,

"கூதிர் வேனி லென்றிரு பாசறைக்
காதலி னென்றிக் கண்ணிய வகையினு,
மேரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந், தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையு,
மொன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்,
பெரும்பகை தாங்கும் வேலி னானு,
மரும்பகை தாங்கு மாற்ற லானும்,
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமு,
மொல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையி னென்றொடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானு,
மொல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்"*

என்பனவாம், இந்நூற்பாவில், அரசன் பாசறையிலிருந்து சிறத்தலும், தேரேறி வந்த புலவர் களம்பாடுதலும், பகைவரை வென்ற வெற்றிக்களிப்பினுல் அரசன் தேர்முன். குரவையாடுதலும், அங்

* தொல், புறத், உக.

ஙனமே தேர்ப்பின் ஆடுதலும், வேற்றொழில் சிறத்தலும், கொடும் பகைவரையுந் தாங்கிப் பொருகின்ற ஆற்றல் சிறத்தலும், உயிரை ஒரு துரும்பாய் நினைத்து வீரமாய்ப் போர் மேற்கொள்ளுதலும், வஞ்சினங் கூறிப் படைஞர் ஆண்மையுடன் உயிர் துறத்தலும், பகைவருந் தம்மையோ ருதவி நாடியவழி அதனை நட்புணர்ச்சி யோடு பெருந்தகைமையுடன் உளமாரச் செய்தலுமென அவை தாம் முறையே கூறப்படுகின்றன.

இனி ஏனோர்க்கும் உரியவாக வருந் துறைகள், ஆனிரை களால் வணிகவேளாளர் சிறத்தலும், மனையற முடையார் பிறர் மனை நயவா திருத்தலும், அவையத்தார் குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக் கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறாமை, அவா வின்மை என்னு மியல்புகளிற் பெருமை பெறலும், இல்லறவொ ழுக்க முடையார் அடக்க முடைமை, ஒழுக்க முடைமை, நடுவு நிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக் காறாமை, பொறை யுடைமை முதலியவற்றிற் சிறப்புறுதலும், எவருங் கொடுத்தற்கரியன கொடுத்தலில் வல்லராதலும், தம்மாட் டுத் தவறு செய்தாரைப் பொறுத்துப் பாதுகாக்கும் பெருந்திறல் பெறுதலும், செல்வப்பொருளிலுங் கல்விப்பொருளிலும் மேம்பாடு பெறுதலும், அங்ஙனம் பெற்ற விடத்தும் அவற்றோடு அருளு டைமை யுடையராய்ப் பொருந்திப் பற்றின்றிப் பயன் துய்த்தலில் ஆண்மை பெறுதலும், இவ்வாறே இன்பத்தின் கண்ணும் பற் றற்று நிற்றலில் வன்மைபெறுதலுமென்று வகுக்கப்படுகின்றன. இவ்வியல்புகளெல்லாம்,

பகட்டி னானு மாவி னானுந்
துகடபு சிறப்பிற் சான்றோர் பக்கமுங்,
கடிமனை நீத்த பாலின் கண்ணு,
மெட்டுவகை நுதலிய வவையகத் தானுங்,
கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானு,
மிடையில் வண்புகழ்க் கொடையி னானும்,
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்,
பொருளொடு புணர்ந்த பக்கத் தானு,
மருளொடு புணர்ந்த வகற்சி யானுங்,

காம நீத்த பாலி னானுமென்
றிருபாற் பட்ட வொன்பதின் றுறைத்தே.

என்று மேற்றுறைகளோடு தொடர்ந்து வருந் துறைகூறு நூற்பாவில் ஆசிரியர் செவ்வையாய் எடுத்து விளக்கினர். இவையெல்லாம் எம் தண்டமிழ் நாட்டுப் பண்டைப் பெருமக்களது தண்டாச்சிறப்பினை நன்கு விளக்குவனவா மென்க. ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறெல்லாம் வாகையியல்புகளைத் தொகுத்தும் வகுத்தும் விளக்கி நிற்றலோடு புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் பெரிதும் ஒத்துச் சிறிதே வேறுபட்டுச் செல்கின்றார். ஆசிரியர் 'அறுவகைப்பட்ட' வென்னு நூற்பாவிற் பகுத்தவாறே ஐயனாரிதனாரும் பார்ப்பனவாகை, அரசவாகை, வாணிகவாகை, வேளாண்வாகை, அறிவன்வாகை, தாபதவாகை, பொருநவாகை முதலியன தமது வெண்பா மாலையிலும் பகுத்தோதுகின்றார். பின்னர் ஆசிரியர் 'கூதிர்வேனி'லென்னு நூற்பாவில் துறைகள் வகுத்தவாறே இவரும் கூதிர்ப்பாசறை, வாடைப்பாசறை, மறக்களவழி, முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை, முரசவாகை, வாகையரவம், களவேள்வி, அவிப்பலி, கிணைநிலையென்பனவும் பிறவும் அரசர் வாகைக்கு வகுத்துக் காட்டுவர். தொல்காப்பியனார் ஏனோர் வாகைக்கு வகுத்த துறைகள் பலவற்றுள்ளும் வெண்பாமாலை யாசிரியர் பொருளொடுபுகறல், அருளொடு நீங்கல் என்னும் இரண்டை மட்டுமே தமது நூலு ளெடுத்துக் காட்டுகின்றார். இவர் தும்பைத்திணைக்கண் அடக்கி உரை கிளத்திய பாண்பாட்டும் முன்றேர்க்குரவையும் பின்றேர்க்குரவையுந் தன்னை வேட்டலுமெல்லாந் தொல்காப்பியனார் 'ஏரோர் களவழியன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்' 'வென்ற கோமான் முன்றேர்க்குரவையும்' 'ஒன்றிய மரபிற் பின்றேர்க்குரவையும்' 'தொல்லுயிர் வழங்கிய வவிப்பலியானும்' என்னுந் துறைகளாக வாகைக்கண் அடக்கி முறையே வகுத்துக் காட்டுவர். என்னை? இந்நான்கும் வெற்றி நிலையை யுணர்த்தி வருகின்றமையி னென்பது. இவ்வுண்மையை யுணரப்பெற்ற ஐயனாரிதனாரும் இவற்றை வாகைப்பகுதிக்கண்ணும் நிறுத்தி உரைகிளப்பாராயினர். எனினும் அவர் போர்க்களத்தில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளுந் தும்பைத்

திணையா மெனக்கருதி, ஆசிரியர் தொல்காப்பியனாரைப் போல எதனையும் பொருள் வரம்பின் கண்ணராய்ப் பாகுபாடுகள் செய்யாமல் மேற்காட்டியவற்றைத் தும்பைக்கண் அடக்கி உரைத்தமையே ஈண்டு மாறுபாடாவதா மென்பது.

இனி வெண்பா மாலையார் தொல்காப்பியனார்க்கு மாறாக இவ் வாகைத்திணைக்கண் செய்யும் வேறொரு மாறுபாடும் இங் கெடுத்துக் காட்டுதற் குரியது. தொல்காப்பியனார் வாகை யென்றுரைத்த ஒழுக்கத்தை இவர் வாகை யெனவும் முல்லை யெனவும் இருவகைப்படுத்து அவ்விருவகைகட்குந் துறைகள் வகுத்து உரையா நின்றார். இவர்க்கு இக் கருத்துண்மை பார்ப்பனவாகை, பார்ப்பன முல்லை; அரசவாகை, அரச முல்லை; அறிவன் வாகை, கணிவன் முல்லை முதலியவாக அவர் வகுக்குந் துறைகளினாலேயே நன்கு விளங்கா நிற்கும். ஆசிரியர் நச்சினார்க்கினியரும் இக்கருத்தொன் றுடையராய்த்,

“தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.”

வென்னுந் தொல்காப்பிய நூற்பாவுக்கு உரைக்கும் உரையில், ‘பாகுபட’ வென்பதை ‘இருவகைப்பட’ வென உரைத்து, ‘இருவகையாவன, தன்னைத்தானே மிகுதிப்படுத்தலும் பிறர் மீக்கூறு படுத்தலுமாம். இனி இருவகைக்குள் உறழ்ச்சியாற் பெற்ற வென்றியை வாகையெனவும் இயல்பாகப் பெற்ற வென் றியை முல்லை யெனவுங் கூறுவர்’ என்று உரைத்திடுவர். இங்ஙன மொன்று ஆசிரியர் இளம்பூரணனார் உரைப்பாரல்லர். இக்கருத் தினை உட்கொண்டே நச்சினார்க்கினியர் ‘தாயர் கூறுவன மூதின் முல்லையாம்; மனைவியர் கூறுவன இல்லாண் முல்லையாம், கண் டோர் கூறுவன வல்லாண் முல்லையா’ மென்று தும்பைத் திணையுரையி லுரைத்தார். இவ்வாறு கூறப்படும் இம் முல்லை பற்றிப் பார்ப்பன ரியல்புரைக்கும் பார்ப்பன முல்லையும், அரச ரியல்புரைக்கும் அரசமுல்லையும், அவையோ ரியல்புரைக்கும் அவையமுல்லையும், கணிவன் நிலையுரைக்குங் கணிவன் முல்லை யும், மறக்குடி மகளிர் நிலை யுரைக்கும் மூதின் முல்லையும், குடி

யொழுக்க முரைக்கும் ஏறாண் முல்லையும், வீரரின் ஆண்மையை வியந்துரைக்கும் வல்லாண் முல்லையும், அரசனது காவற்றன்மை யுரைக்குங் காவன் முல்லையும், மன்னன் போர் மேற்கொண்டமை யுரைக்கும் பேராண் முல்லையும், வீரனது கொதிப்புரைக்கும் மறமுல்லையும், குடைநிலை யுரைக்குங் குடை முல்லையும், சான்றோரியல் புரைக்குஞ் சால்பு முல்லையுமாகப் பல துறைகள் வெண்பாமாலையிற் காணப்படுகின்றன. இவ்வியல்பு ஏறாண் முல்லை, மூதின் முல்லை, வல்லாண் முல்லை யென்னும் மூவகைத் துறைகளாய்ப் புறநானூற்றிலேயே பயின்று வருமாயினும் முழுமுதலிலக்கண நூலான தொல்காப்பியத்துள் யாண்டுங் காணப் படாமையின், இஃது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கு வேறான தொன்மையா மென்க. இங்ஙனமே தொல்காப்பியத்துட் காணப்படாத பல துறைகள் அகப்பொருட்கண் திருச்சிற்றம் பலக்கோவையாரிற் காணப்படுதல் போலப் புறப்பொருட்கண் புறநானூற்றினுங் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் பற்றிப் பின்னரொரு தனிக்கட்டுரையில் வேறெடுத்து விளக்குவேமாகலின், அவற்றையெல்லாம் ஆண்டுக் கண்டுகொள்க.

இனி இவ்வியல்பினதாய் வரும் வாகைப்புறம் தனக்கு இனமான பாலையகத்தோடு நுணுகிப் பொருந்துமாறும் ஆராயற்பாலது. வாகை யொழுக்கத்துக்கும் பாலை யொழுக்கத்துக்கும் உரிய இடம் முல்லை குறிஞ்சி முதலான நால்வகை நிலத்துக்கும் நடுப்பட்ட வெறுநிலமாகும்; இதனையே பாலைநிலமென்று கூறுப. இவ்வியல்பினைப் 'பொருள்வயிற் பிரிவு' என்னும் எமது **அகப்பொருட் கட்டுரையில்** விளக்கியிருக்கின்றேம். வெற்றியெய்திய அரசன் அவ் வெற்றித்தோற்றம் விளங்கும்படி நெய்தனிலத்தை விட்டு வழிப்பற்றுவனாதலின், அவன் பற்றிவரும் அவ் வழிநிலமே வெற்றிக்குரிய நிலமென்க. அது பாலையாம்; தலைவியைப் பிரிந்த தலைவனும் அன்றித் தலைவியோடு உடன்போகும் தலைவனுந் தமது பாலையொழுக்கத்தை நிகழ்த்துமிடம் அவ் வழிநிலமே யாதல் காண்க. எனவே, அகப்பொருட் பாலைக்கும் புறப்பொருள் வாகைக்கும் நிலம் பாலைநிலமாதல் பெறப்படுமென்பது. அற்

றன்று, இளம்பூரணர் முதலான உரையாசிரியன்மா ரெல்லாரும் தொல்காப்பிய உரையிற் * பாலை யொழுக்கத்துக்கு நிலமில்லை யென்று கூறினரெனின், அன்று; அவரெல்லாம் நிலமில்லையென்று கூறினரல்லர்; மற்று அதற்கென்று ஒரு தனிநில மில்லையென்றே கூறினர்; அஃதொக்கும், ஏனென்றால், பாலைநிலமென்பது நால்வகை நிலங்களின் வழிநிலமேயாதலானும், வழிக்கொடுமையின் முதன்மைபற்றி முல்லை நிலமுங் குறிஞ்சி நிலமும் முறைமை திரிந்து வெம்மை மிக்க வெறுமணல் நிலத்தை அதற்கு ஆசிரியன்மார் எடுத்துக்காட்டுவராதலானும் † அந் நிலங்கள்தாமும் உற்று நோக்குவார்க்கு நானிலப் பகுதிகளில் அடங்கித்தோன்றுமாகலானும் உரையாசிரியன்மாரெல்லாம் பாலைக்குத் தனிநிலமில்லை யென்று உரைப்பாராயின ரென்பது. ஆசிரியர் தொல்காப்பியனாரும் இக்கருத்தினை உட்கொண்டே "மாயோன் மேய காடுறை யுலகமு" ‡மென்னும் அகத்திணையிய னூற்பாவில் நால்வகை நிலங்களே பகுத்தோதிப் பாலைத் தனிநில மென வொன்று சுட்டாராயினர். ஆகவே, பாலைக்கெனத் தனிநிலமொன் றில்லையென்பதே இன்னோரன்னவற்றின் கருத்தாகக் கொள்ளல்வேண்டும். மற்றப்படி பாலையும் வாகையும் அகம்புறமாய் நிகழ்தற்கு இந் நானிலங்களினின்றுந் தோன்றிய வெறுமணல் வழிநிலமான பாலைநிலமெனப் படுவதொன் றுரியதென்று ஆசிரியன்மார் மரபுகொண்டமையும் மறுக்கப்படாதென்பது அறியற்பாற்று. இஃதே ஆசிரியர் தொல்காப்பினர்க்குக் கருத்தாதல்,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே."‡‡

என்னு நூற்பாவினாற் பொழுதென்னும் முதற்பொருளும், 'புணர்தல் பிரித'$ லென்னு நூற்பாவினா லுரிப்பொருளும் பாலைத்திணைக்கு வகுத்துக்காட்டுதலின் குறிப்பிடைவைத் துணர்ந்து கொள்ளப்படும். தொல்காப்பிய உரையில் உரையாசிரியன்மார்

---

* தொல், புறத், கஅ. † சிலப், காடுகாண், கூசு-எ.
‡ ,, அகத், கரு. $ தொல், அகத், கசு.
‡‡ ,, ,, க

பாலைக்குக் கருப்பொருள் வகுத்துக்காட்டுதலும், ஆசிரியர் அடியார்க்கு நல்லாரும் இங்ஙனமே சிலப்பதிகாரப் பதிக உரைமுகத்து இலக்கியச் சான்றுகள் காட்டி முதல் கரு உரிப்பொருள்கள் மூன்றும் வகுத்து விளக்குதலும் முதலாயின இக் கோட்பாட்டை எடுத்து நிறுவுதற்கு ஏற்ற மெய்ப்பொருட் சான்றுகளாமாறு கண்டுகொள்க வென்பது.

இனிப் பாலைக்குப் பொழுது இளவேனிலும் நண்பகலுமாமென்பதே ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தென்று யாம் தும்பைத்திணைக் கட்டுரையில் நன்கு விளக்கியிருக்கின்றேம். எனவே, தலைவன் நண்பகற் பொழுதில் தலைவியைப் பிரிந்து மணல்வெளியில் வழிச்செல்லல் போலவே, அரசனும் வாகையுடையனுய் வெயிலெல்லாம் வழியிற் றங்கி மாலையில் தலைவியை நணுகுதல் கண்டுகொள்க. வாகைத்திணைக்கண்ணும் அரசன் முடியிலணியும் வெற்றிப்பூ 'கொத்தான்வாகை' யென்று புறப்பொருள் வெண்பாமாலையுரையிற் கூறப்படுதலின், அது பாலைநிலத்துப் பூவாதலும் இங்கு ஒப்பு நோக்கற்பாலது. அப் பூ வெண்ணிறமாயிருக்குமென்பது "வெண்கண்ணியுங் கருங்குழலும்"* என்று வெண்பாமாலையில் வருதலாலறியப்படும். இனி உரிப்பொருட் கண்ணும் இவ்வகப்புறத் திணைகள் மிக்க ஒற்றுமையுடையனவாம். பாலைக்கு உரிப்பொருள் பிரிதலென்ருர் ஆசிரியர். வாகைத் திணைக் கண்ணும் அரசன், கலந்து புரிந்த போரினின்றும் பகைவரைப் பிரிந்து நிற்றல் கண்டுகொள்க.

பாலைநிலத்தின் தோற்றமெல்லாம் வெறும் வெளியேயாகும்; அவ்வெளியினையே சான்ருேர் வான் என்ப. அவ்வானென்னும் வெளியில் எல்லா நுண்ணணுக்களுங் கலந்து விளங்குதலின், வானியல்பு கலப்பென்றே உரைக்கப்படும்; மேலும், ஒருபொருள் பல வணுக்களால் உருவடைந்திருக்கின்றது; உருவுடைய அப்பொருளின் ஒவ்வோரணுவினிடையிலும் வான்வெளி யுளதென்று இஞ்ஞான்றை இயற்கைப்பொருணூலாரும் ஒத்துரைப்ப. போர் விளைக்கும் அரசரிருவருள் ஓர் அரசன் வாகையெய்தினனெனவே

---

* புறப்-வெ, அ : உ.

ஏனை மாற்ருர்பக்கமும் அவனேடு பகைதீர்ந்து ஒற்றுமையுடைய தாய்க் கலந்துநிற்றலால், வாகையிற் கலப்புண்மையறிக. இனி வானிடை அணுவும் அணுவிடை வெளியுமாக அவை கலந்திருத்த லின், அணுக்கள் ஒன்ருேடொன்று உராயுங்கால் ஆண்டுப்பிறக்கும் ஓசை இவ் வெளிக்கணின்றும் விளையா நிற்கின்றது. எனவே ஓசை பிறக்குமிடம் வான்வெளியென் றறிந்துகொள்க. "சத்த முன்னுத் தோன்றும் வான்" *. என்பது சிவஞான சித்தியார். வான் வெளியிற் பிறக்கும் ஓசையை உணர்வது மெய்ப்பொறிகள் ஐந்தனுள்ளுஞ் செவிப்பொறியேயாதல் கண்கூடு. வாகைப்பேற்றை அரசன் அறிவதும் செவியினுலென்க. என்னை ? தனது வாகை யைக் கண்டார் புகழ்ந்து கூறுஞ் சொல்லோசைகள் அவன்றன் காதிற்கு எட்டுகின்றமையி னென்பது. பாலை யொழுக்கத்தின்கண் ணுந் தலைவி தன் தலைவனது பிரிவை அவன் கூறுஞ் சொற்களாலுந் தோழி முதலியோர் கூறுஞ் சொற்களாலுஞ் செவிப்பொறியாற் கேட்டே அறிந்துகொள்வளென்க. இறுதியாக வாகைபயிலும் அரசனுக்கும், பாலைபயிலுந் தலைவனுக்கும் இப்பயிற்சிகளால் விளை வது அருளென்னும் அரிய இயல்பேயாகும். வாகையரசன் தன்ஞ லழிக்கப்பட்ட பகைவர்மேல் ஓர் அருளும், பாலைத்தலைவன் தன் ஞற் பிரிக்கப்பட்ட தலைவியின்மேல் ஓர் அருளும் உண்டாகப் பெறுவரென் றறிந்து கொள்க.

இவ்வாற்ருல் வான்வெளியின் பயிற்சி, கலப்பென்னும் வாகை யுணர்ச்சியால் நுணுகிக், கேட்குஞ் செயலால் அருளென்னும் பாலையுணர்ச்சியாய்ப் பின்னும் நுணுகி யமைதல் அறியப் படும்.

---

* சிவஞானசித், உ : சுரு.

# அல்லிருப்பண் *

(திரு. அ சிதம்பரநாத னவர்கள் B. A.)

மணி இப்பொழுதுதான் இரண்டடித்தது. அவியப்போகும் மெழுகுதிரி எழும்புவதும் பின் னமுழுந்துவதுமாக இருக்கிறது. காவற்காரன் தூக்கத்தில் மணியென்ன வாகிற தென்பதை மறந்து விடுகிறான். பகலெல்லாம் தாளாற்றி வினைசெய்தோரும் மனக்கவலையற்றோரும் தூங்குகின்றார்கள். யாதானு மொரு பொருளைப்பற்றி நினைப்போரும் குற்றஞ் செய்வோரும் உண்டாட்டான் மகிழ்வோரும் ஏக்கமுறுவோரும் நீங்கலாக வேறு யாரும் விழித்திருக்கவில்லை. குடிகாரன் குடிகெடுக்குங் கிண்ணத்தை இன்னொரு முறை நிரப்புகிறான். கள்ளன் அல்லிருப்பணியிற் றென்றெண்ணி நாட்டைச் சுற்றித் திரிகிறான். தற்கொலை புரிவோன் தனது மறுவுறுங் கையையே தனது தூயவுடம்புக் கெதிரே தூக்குகின்றான்.

இனி, பழைமையைக் குறித்தும் தற்காலத்து வாழும் கவித்திறமிக்கோரின் கூற்றுக்களைக் குறித்தும் இவ்விரவைக் கொன்னே கடத்திவிடாது, கொடிதோறும் மாறுபடும் பெருமையும் ஆகுலமும் நிறைந்து சற்றுமுன் நம்முன்னே நடந்து சென்றோரது தனிவழியைப் பார்ப்போமாக. எதற்கு மிணங்காது அழுது கொண்டிருந்த குழந்தை விரும்பிக் கேட்டவற்றை மறந்து துயில் கொள்ளுதல் போன்று தமது வேண்டுகோள்களையும் வெற்றிகளையும் விழைவுகளையும் மறந்துறங்குமவர் நிலைமை என்னனென்பது!

எங்குப் பார்த்தாலும் இருள் சூழ்ந்திருக்கிறது. அவியப் போகும் விளக்கிலிருந்து பளபளப்பொன்று காணப்படுகிறது. காலங்காட்டுங் கருவியி னசைவிற்படு மிசையும் காவல் நாயின் குரைத்தலொலியும் நீங்கலாக வேற்றொலி கேட்கப்படவில்லை.

---

* இஃது ஆங்கிலப்புலவர் கோல்டுசிமித்தா லெழுதப்பட்ட கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்.

மனிதனுடைய இறுமாப்பினு லேற்படு பரபரப்பும் மறக்கப்பட்டிருக்கும்; மனிதனுடைய இறுமாப்பும் ஆகுலமும் நிலைபெரு வென்பதை இது போன்ற ஒரு நாழிகை விளக்கிக் காட்டுவ தாகக் கொள்க. சிறிது காலமே யுள்ளதுபோற் றோன்றும் இந்தத் தன்னந் தனியான நிலைமை நெடுநாள் நீட்டித்து நிற்குங் காலமும், நாட்டிலுள்ளோரைப் போன்று நாடுதானும் வர்ட்ட முற்றுத் தன்னலங் குன்றிப் பாலையாகத் திரியுங் காலமும் உண்டென்பதொருதலை.

இந் நாட்டைப்போன்ற எவ்வளவு பெரிய நாடுகள் எவ்வளவு வெற்றித்தார்கள் புனைந்து கொற்றக் கொடியை நாட்டி வரம்பிலா மகிழ்ச்சியுற்றுச் சிற்றறிவால் அழிவிலாத் தன்மையைத் தம்மீதேற்றிக்கொண்டு வாழ்வின் பெருமையைப்போற்றிக் கூத்தாடின! அந்நாடுகளுட் சில விருந்த விடத்தைக்கூட பின்வந்தோர் குறிப்பாலு மறியக்கூட வில்லை. வருத்தமுற் றுழலும் வழிப் போக்கன் பாழடைந்து கிடக்குஞ் சில நாடுகள் வழியே போகிறான். போகுமவன் நாடழிவுற்றுக் கிடப்பதைக் கண்டு அறிவு நிரம்பப்பெறுவதோடு மண்ணிடைப் பெற்ற பேறுகளனைத்தும் நிலைபெறுதவை யென்பதை யறிந்து கொள்கிறான்.

அவன் பின்வருமாறு கூறுகிறான், "பூடுகள் நிறைந்த இவ்விடத்திற்றான் அவர்களுடைய அரண் இருந்தது. இப்பொழுது நஞ்சுடைப் பூச்சிகளும் புழுக்களும் கூடு மிவ்விடத்திற்றான் அவர்தம் அத்தாணி மண்டபம் இருந்தது. இன்னதென் றறியப்படாது சிதறுண்ட கற்கள் குவிந்துகிடக்கு மிங்குதான் அவர்தம் நாடகமேடைகளுங் கோவில்களு மிருந்தன. பெருவாழ்வும் பேரவாவுமே அவை விழுந்துகிடப்பதற் கேது. பாடுபட்டுழைப்போரை விட்டு வீண்வேடிக்கைக்காரருக்கே மன்னரால் வெகுமதிகள் அளிக்கப்பட்டன. அவர்தம் வசியும் வளனும் வேற்று நாட்டாரைக் கவர்ந்திழுத்தன. வேற்று நாட்டார் முதலிற் றுரத்தப்பட்டனரே யாயினும் அவர் ஊக்கங் குன்றாது மீண்டும் வந்து அந் நாட்டிலிருந்தோரைத் தாக்கிச் செதுக்கி அவரிருந்த விடமுந் தெரியாதவா றடித்துப் போட்டனர்."

சில நாழிகைகளுக்கு முன் ஊசி விழுந்தால் ஊசி யெடுக்க முடியாது கூடிக்கிடந்த தெருவில் இப்பொழுது வெகு சிலரே காணப்படுகின்றனர். அவ்வாறு காணப்படுவோருட் பகற் கோலங் கொள்வோருங் காமத்தையுந் துன்பத்தையும் மறைப்போருங் காணப்படவில்லை.

ஆனால், தெருக்களையே படுக்கையாகக் கொண்டு பொருள் படைத்தோர் வாயில்களின் கீழே தமது ஏழைமைத் தன்மையுட னிளைப்பாறுபவர் யார்? அவர்கள் தாம், மீட்கப்பட முடியாதவாறு தாழ்வடைந்திருப்போரும் பிறரிட முண்டாகு மிரக்கத்தாற் பயன் பெறமுடியாதவாறு பேரிடர்ப்படுவோருமாகிய அயலாரும் நா டோடிகளும் பற்றுக்கோடில்லாதவருமாவர். அவர்தம் ஏழைமை இரக்கத்தினு மிகுதியாக அச்சத்தையே யெழுப்புகின்றது. சில ருக்குக் கிழிந்த துணிகூட கிடையாது. சிலர் நோயினுன் மெலிந் தொடுங்கிப் பிணம்போற் காணப்படுகின்றனர். உலகத்தார் அவர்களையெல்லாங் கைவிட்டு விட்டனர். மக்கள் குழாங்களும் அவர்களை யெல்லாம் வெற்றுடம்புடன் கிடந்து பசிக்கிரையாமாறு விட்டுவிட்டன. இன்று பனியிலுங் குளிரிலுங் கிடந்து நடுக்க முறும் பெண்கள் கட்டழகு வாய்ந்தவரென்று பிறராற் புகழப் பட்டு ஒருகால் மகிழ்ச்சியுற்றிருந்தனர். கூலியுண்டு கடலன்ன காமமுழந்த கண்டகனுற் கட்டுண்ட காரிகைகள் இப்பொழுது மாரிக்காலக் கொடுமையைக் காண வெளிப்படுத்தப்பட் டிருக்கின் றனர். ஈ விரக்கமில்லாது திட்டுவதே யன்றிக் கையிலொன்றுங் கொட்டாது கைவிட்ட காமுகரின் வாயிலிலே படுத்துக்கொண்டு இப்பொழுது அப் பெண்கள் வழக்காடுகின்றனர் போலும்!

துன்பத்தி லாழ்ந்துகிடக்கு மேழைகளுக்கு ஒன்று முதவ மாட்டாத யான் ஏன்பிறந்தேன்! ஏன்பிறந்தேன்!! ஆ! வீடில்லா ஏழைகாள்! உம்மை உலகம் பழிக்குமேயன்றி உமக்குதவுவதில்லை. ஆனால், பெரியோருடைய சிறு துயரங்களும் செல்வருடைய மனத் தோற்றமான உண்மையல்லா நோய்களும் வானமளாவ உரைக்கப் பட்டு எமது கருத்திடைப் புகுந்து கண்ணீர் வடிக்கச் செய் கின்றன. கொடுமை புரியும் ஒவ்வொரு வகுப்பாராலுந் துன்

புறத்தப்பட்டுத் தம்மைப்பற்றிக் கவலையுறுவோ ரெவரு மின்றித் திண்டாடு மேழைகள் கதறுகின்றார்கள்; மற்ற எல்லோரையும் பாதுகாக்கும் ஒவ்வொரு சட்டமும் ஏழை மக்களுக்கு ஒவ்வொரு பகையாகவே இருக்கின்றது.

ஏன் என்னுடைய நெஞ்சு இவ்வளவு உணர்ச்சியுள்ளதாகப் படைக்கப்பட்டது? அன்றி, நெஞ்சிடைத் தோன்றும் நெகிழ்ச்சிக் கிசையுமாறு ஏன் என்செல்வம் படைக்கப்படவில்லை? உதவிபுரியு மாற்றலில்லாத விடத்துத் தோன்று மிரக்கம் உதவியை நாடி நிற்கும் ஏழையைவிட இயலா திரக்கப்படு மனிதனை வாட்டி வருத்துகிறது. என்னே உலகினமைப்பு!

---

# அறிவுரைகள் *

[திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

புறச் சீர்திருத்தங்கள் விரும்பிய பேற்றினை அளிக்காமல் சின்ன பின்ன மடைதற்கு, சீர்திருத்தக்காரர், பெரும் பேற்றினை யளிக்க அவை படிகளேயாம் என்னும் உண்மையை அறிந்து கொள்ளாமல், அவற்றையே முடிவாய்க் கருதி விடுதலே ஏது வெனலாம்.

உண்மைச் சீர்திருத்தங்களெல்லாம் பண்பட்ட நெஞ்சத்தி னின்றும் உளத்தினின்றும் எழவேண்டும். ஒரு சில ஊண்களை யும், பானங்களையும் நீக்கி விடலும், ஒரு சில புறப்பழக்கங்களை அகற்றி விடலும் நலமும் இன்றியமையாததுமாகும். ஆனால் அவை தொடக்கக் குறிகளே. அவற்றுடன் நின்று விடுதல் மெய் யுணர்வு பெற்ற வாழ்க்கைக்கு அரண் செய்ததாகாது. ஆகலின்

---

* ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கில நாட்டுப் பெரியார் இயற்றிய அறி வுரைகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

நெஞ்சத்தினைத் தூய்மையாக்கலும் உளத்தினைப் பண்படுத்தலும், அறிவை வளர்த்தலும் நலம் பயக்கும். ஏனெனின் புத்துயிர் பெற்ற நெஞ்சமே வேண்டற்பாலது.

II

நாட்களோ நீளப் போய்க்கொண் டிருக்கின்றன. ஞாயிறும் நாடோறும் சிறிது உயரத்தோன்றியவா றிருக்கின்றான். வெளிச்சமும் சற்று அதிகமாகவே யிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு நாளும் நாம் நம்மைப் பலப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் மெய்யறிவைப் பெற முந்துறலாம். நம் உளத்தில் நேர்மையாகிய ஞாயிறு ஒளிமிக வீசிக்கொண் டிருக்கவுஞ் செய்யலாம். ஞாயிறோ அளவிற் பெரிதாவதில்லை, ஒளியினும் மிகுவதில்லை. ஆனால் இந் நிலவுலகம் அஃதினைச் சுற்றுங்கால் ஒளியை மேலும் மேலும் பெறுகின்றது. உண்மையும் நலமும் என்றுமுள. அவை அளவில் மிகுதலும் குறைதலுமில்லை. ஆனால் நாம் அவற்றினை நாடும்போது அவற்றின் ஒளியினையும், பேருதவியினையும் மேலும் மேலும் அடையப் பெறுகிறோம்.

III

ஒவ்வொரு நாளும், புதுப்புது நிலையை யடைய வழி காட்டுகிறது. இக்காலம் பழைய காலமல்ல. இஃதோர் புதிய தோற்றம், புதிய உண்மை, வரப்போகும் புதிய வாழ்க்கை முறைமை; புதிய திட்டத்தை, புதிய சமூகத்தை, புதிய காலத்தை இது முன் காட்டுகிறது. மக்களனைவர்க்கும் புதிய நம்பிக்கைகளையும், புதிய வழிகளையும் காட்டிக் கொண்டிருக்கிறது. நீ ஓர் புதிய மகனாகலாம், புதிய மகளாகலாம். இக்காலம் உன்னை எத்துறையினும் புதியவனாக்கி விடுங் காலமாயிருக்கலாம். கடந்த தவறுகளினின்றும், தோல்விகளினின்றும், துக்கங்களினின்றும் நீ புதிய மகனாய்த் தோன்றிப் புதிய கொள்கையுடன் வலியும், ஒளியும் பெற்று உலகத்திடையே உலவலாம்.

உன் உளத்திலும், யாக்கையினும் தூய்மை உரம் பெற்று விளங்கட்டும். அற்ப இன்பங்களை அறவே யொழி. உளத்தினின்

றுந் தன்னலப் பேயை ஓட்டி, மேதக்க தூய வாழ்வினை வாழ்வா யாக.

## IV

எத்தகைய வெற்றியடைதற்கும் முன்னே பயிற்சி வேண்டும். எவ்வாறு ஒரு பூவோ, அன்றி ஒரு மலையோ தானாகவே தோன்றி விடுதல் இல்லையோ, அவ்வாறே வெற்றியும் திடீரெனத் தோன்றுதல் இல்லை. ஒழுங்கான ஏதுக்களும், அவற்றின் பலன்களுமாய வளர்ச்சியின் முடிவே வெற்றியாம், விருப்பமாத்திரத்தானோ, மந்திர மொழியானோ உலகத்தில் வெற்றியடைந்து விடல் முடியாது, சீர்பெற வாற்றும் முயற்சிகளாற்றான் அப்பேற்றினை யடைதல் ஆகும். பேரின்ப வெற்றி யடைய விரும்புவோனுக்கு வெற்றிக் காலமே, பெருஞ்சோதனை நாளுமாகும். மௌனமாய்ச் சிந்தித்தாருக்கெல்லாம், அற்பச்சோதனைகளிலும் இடையறுவெற்றியடைதலினுமே பேரின்பவெற்றி சித்திக்கப்பெறுவது. பன்னாட்களாய்ப் பயின்று உறுதியான வெற்றியடையு நாளே, பெருஞ்சோதனை நாளுமாகும்.

## V

வானின்று பெய்யும் மழை, வருங் கால அறுவடைக்கு நிலத்தைப் பதஞ் செய்தல் போல, நெஞ்சின்கண் விடாது பெய்யும் துன்ப மழை உளத்தை ஒரு நிலைப்படுத்தி, நெஞ்சினை மகிழ்விக்கும் பேரறிவை வரவேற்க, நெஞ்சத்தினைப் பதப்படுத்தி வைக்கிறது. நிலவுலகினுக்குத் தண்மை யளித்துப் பலன்றரவே, மேகங்கள் இருண்டு சூழ்வது போன்று, நெஞ்சம் உயர்நிலை யடைவான் துன்ப மேகங்கள் அதனைச் சூழ்வதென்க. துன்பத்தால் நலியு நாளே ஒளி பெறும் நாள். அன்றே பிறர் எள்ளுதலும், நகையாடலும், தூற்றலும் ஒழியும் நாள். அது நெஞ்சைக் கனியவைத்து மிருதுவாக்குகிறது. உளத்தில் அறிவுச்சுடர் துலங்கவைக்கிறது. துன்ப நாளில், அறிந்து உணரப்பெற்றவையே பேரறிவாகும்.

உன் துன்பம் நிலைத்துவிடுமோ வென நினையற்க. மேகமே போன்று, அது மறைந்துவிடும்.

## அறிவு மொழிகள்

இருக்க வேண்டிய நிலையில் உன்னை வைத்துக் கொள்ள உன்னால் முடியாவிட்டால், பிறர் நீ விரும்புமாறு இருக்க வேண்டு மென்று எப்படி நீ எதிர் பார்க்க முடியும்?

பிறர் திருந்த வேண்டுமென்று விரும்புவோமே யன்றி, நமது தவறுகளைப் போக்கிக் கொள்ள மாட்டோம்.

பிறரை வன்மையாய்க் கண்டிப்போம், ஆனால் நாமே நம்மைத் திருத்திக் கொள்ளுகிறதில்லை.

பிறர் அனுபவிக்கும் ஏராளமான உரிமைகளை நாம் பொறோம், ஆனால் நமது விருப்பங்களை எள்ளளவும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கிறதில்லை.

பிறரைக் கொடிய சட்ட திட்டங்களுக்கு உட்படுத்திவைப் போம், ஆனால் நாமோ, ஒரு சிறிதும் அவற்றுக்குக் கட்டுப்பட ஒருப்படோம்.

எல்லோரும் தூயர்களாயிருந்தால், கடவுளிடம் முறை யிட வேண்டிய அவசியமே ஏது?

ஆனால் கடவுளுடைய விதி என்ன? ஒருவருக்கொருவர் குற்றங் குறைகளைச் சகித்துக்கொள்ளவேண்டும்; ஏனென்றால் எவனும் தவறில்லாதவனல்லன்; ஒவ்வொருவனுக்கும் அவனவ னுடைய பாரமிருக்கிறது; ஒருவனே தன் காரியங்களை யெல்லாம் செய்து கொள்ள முடியாது; எவனும் தானே அறிஞன் என்று சொல்லிக் கொள்ள முடியாது, ஆனால் ஒருவருக்கொருவர் சகித் துக்கொண்டு போகவேண்டும், அறிவுச்சுடர் கொளுத்த வேண் டும், ஒருவரை யொருவர் திருத்திக் கொள்ளவேண்டும்.

வறுமைப்பிணி வருங்காலத்தேதான் ஒவ்வொருவரிடமும் ஒழுக்கமும், பலமும் போதியவாறிருக்கிறதென்பது வெளி யாகும்.

அக்காலங்கள் மனிதனைப் புறங்காட்டச் செய்யா, ஆனால், அவன் எப்படிப்பட்டவன் என்பதைக் காட்டுகிறது.

# தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.

## தனித்தமிழ்த் தேர்வுப் பாடமுறைகள்

---

(1930 முதல் 1934 முடிய)

இத் தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த **திருவள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரித்** தேர்வுமுறை கருதி இச்சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் தனித்தமிழ்த் தேர்வுகள் **தமிழ்த்தேர்வு, இளந் தமிழ்ப்புலவர், தமிழ்ப்புலவர் (பொது), தமிழ்ப்புலவர் (சிறப்பு)** என்று நான்கு வகைப்படும். இவற்றின் பாடமுறைகள் அடியிற் குறிக்கப்பட்டுள்ளன. இத் **தேர்வுகள் ஆண்டுதோறும்** ஜூன் மாதம் இறுதிநாட்களில் நடைபெறும். தேர்வு நடைபெறும் இடங்களாகக் குறிக்கப்பெற்றிருப்பவை ; **திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சிதம்பரம், ஆரணி, சென்னை, திருவனந்தபுரம், கொழும்பு, யாழ்ப்பாணம்.** வேறிடங்களில் தேர்வு நடைபெற வேண்டுமானால் ஐவர்க்குக் குறையாதவர் விண்ணப்பித்திருக்கவேண்டும்.

---

### தமிழ்த்தேர்வு

#### இலக்கியம் I.

1. நளவெண்பா—சுயம்வரகாண்டம்
2. திருவாரூர் நான்மணிமாலை—குமரகுருபர அடிகள்
3. திருக்கருவைக் கலித்துறையந்தாதி—அதிவீரராமபாண்டியன்
4. திருவேங்கடத்தந்தாதி (முதல் 50 பாடல்)—பிள்ளைப்பெருமாளய்யங்கார்
5. கலைசைச்சிலேடைவெண்பா (முதல் 50 பாடல்)—தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்

6. செய்யுட்பாடக்கோவை இரண்டாம்பாகம்—கலம்பகப் பகுதியில் முதல் 50 பாடல்—பு. சி. புன்னைவனநாதமுதலியார்

## இலக்கியம் II.

1. வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச்சருக்கம்
2. திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதிமுனிவர்)—பழியஞ்சின படலம், இசைவாது வென்ற படலம்
3. சூடாமணி நிகண்டு—8, 9, 10-வது தொகுதிகள்

## இலக்கணம் I

1. நன்னூற் காண்டிகை (ஆறுமுகநாவலர்)
2. தொல்காப்பியம் மூலம்—மரபியல். பு. சி. புன்னைவனநாத முதலியார்

## இலக்கணம் II

1. யாப்பணியிலக்கணம்—விசாகப் பெருமாளையர்
2. யாப்பருங்கலம் மூலம்—கழகப்பதிப்பு

## வசனம்

1. சேக்கிழார் சரித்திரம்—கா. சுப்பிரமணிய பிள்ளை
2 சேதுநாடும் தமிழும்—ரா. இராகவையங்கார்
3. தமிழ்—செல்வ கேசவராய முதலியார்

## சமயநூல்

தேவாரம்.—திருவாவடுதுறை (இடரினுந் தளரினும்) பதிகம்--சம்பந்தர் பசுபதித்திருவிருத்தம், திருக்குருகாவூர்த் திருத்தாண்டகம்—அப்பர்

திருக்கழுமலவளநகர்—சாதலும் பிறத்தலும் என்ற பதிகம், சுந்தரர்.

திருவாசகம்:—கோயிற்றிருப்பதிகம், வாழாப்பத்து, திருக்கோத்தும்பி,—மணிவாசகர்

திருவாய்மொழி:—'உயர்வறவுயர்நலம்', 'பத்துடை',—நம்மாழ்வார்

### நீதிநூல்

திருக்குறள் (பரிமேலழகர் உரை), நீத்தார்பெருமை, வாழ்க்கைத் துணை நலம், நடுவுநிலைமை, பயனில சொல்லாமை, ஈகை.

நான்மணிக்கடிகை

நீதிநெறிவிளக்கம் முதல் 50 பாடல்.

### கட்டுரை

பொதுவான பொருள்களைப்பற்றி.

---

## இளந்தமிழ்ப் புலவர்

### இலக்கியம் I

1. திருச்சிற்றம்பலக்கோவையார்—செய்யுள் 100 முதல் 300 வரை
2. இளசைப்பதிற்றுப்பத்தந்தாதி—சிவஞானமுனிவர்
3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்—மீனாட்சிசுந்தரம் பிள்ளை
4. திருவரங்கக் கலம்பகம்—பிள்ளைப்பெருமாளையங்கார்
5. சூடாமணி நிகண்டு பதினொன்றாந் தொகுதி

### இலக்கியம் II

1. இரகுவமிசம் முதற்பாகம் முதல் 300 பாடல்
2. கம்பராமாயணம்—பாலகாண்டம்—மிதிலைக்காட்சிப் படலம் முதல் வரைக்காட்சிப் படலம்வரை
3. நைடதம்—அன்னத்தைத் தூதுவிட்டபடலம், கைக்கிளைப் படலம்
4. பிரபுலிங்கலீலை—மாயைபூசைகதி, அல்லமதேவர்கதி.
5. மணிமேகலை—முதல் 5 காதைகள்
6. புறநானூறு—பாடல் 25 முதல் 50 வரை

### இலக்கணம் I

1. நன்னூல் விருத்தி.
2. யாப்பருங்கலக்காரிகை

## இலக்கணம் II

I. நம்பியகப்பொருள்
2. தண்டியலங்காரம்—ரிப்பன் பிரஸ்
3. புறப்பொருள் வெண்பாமாலை—வே. சாமிநாதையர்

## வசனம்

1. கபிலர்—ந. மு. வெங்கடசாமி நாட்டார்
2. தென்மொழி வரலாறு—ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை
3. மாணிக்கவாசகர்—கா. சுப்பிரமணியபிள்ளை
4. சிலப்பதிகார விளக்கம்—ரா. பி. சேதுப்பிள்ளை

## சமய நூல்

**தேவாரம்:**—திருச்செங்காட்டங்குடி 'பைங்கோட்டு' என்றபதிகம், திருத்தோணிபுரம்—'வண்டரங்கப் புனற்கமல' என்ற பதிகம் சம்பந்தர்

திருவொற்றியூர்த் திருநேரிசை
திருச்சத்திமுற்றம் திருவிருத்தம்
தனித்திருக் குறுந்தொகை (ஏயிலானை என்ற பதிகம்)
} அப்பர்
விணவிடைத் திருத்தாண்டகம்

**திருவாசகம்:**—போற்றித் திருவகவல்
**அற்புதத்திருவந்தாதி:**—முதல் 50 பாடல்—காரைக்காலம்மையார்
**கண்ணிநுண் சிறுத்தாம்பு:**—மதுரகவியாழ்வார்

## நீதிநூல்

**திருக்குறள்:**—அறத்துப்பால்—துறவறவியல்
பொருட்பால்—அரசியல், அமைச்சியல்

சிறுபஞ்சமூலம்
நீதிநூல் (வேதநாயகம்பிள்ளை) முதல் 50 பாடல்

## கட்டுரை

பொதுப்பொருள்கள்.

## செய்யுளியற்றல்

ஆசிரியப்பா, வெண்பா.

# தமிழ்ப் புலவர்

## பொது

### இலக்கியம் I

(1) திருக்கோவையார் முதல் 100 பாடல்
(2) கலிங்கத்துப்பரணி
(3) அழகர் கலம்பகம்
(4) மூத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்—குமரகுருபரர்

### இலக்கியம் II

(1) பெரியபுராணம்—கண்ணப்ப நாயனார்
(2) கம்பராமாயணம்—யுத்தகாண்டம்—மாயாசீதை மாயாஜனகப் படலம்
(3) சிந்தாமணி—குணமாலையாரிலம்பகம்
(4) பத்துப்பாட்டு—குறிஞ்சிப்பாட்டு
(5) மனோன்மணியம் (P. சுந்தரம் பிள்ளை)

### இலக்கணம் I

தொல்காப்பியம்—சொல்-சேனாவரையம் (கழகம்)
யாப்பருங்கலவிருத்தி

### இலக்கணம் II

இறையனார் அகப்பொருள்
மாறனலங்காரம்—பொருளணியியல்

### நீதி நூல்

பழமொழி—முதல் 20) பாடல் (T. செல்வகேசவராய முதலியார்)

### வசனம்

மதிவாணன்—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
திராவிடப் பிரகாசிகை
திருஞானசம்பந்தர் சரித்திரம்—கா. சுப்பிரமணிய பிள்ளை
தமிழ்மொழி வரலாறு முதற்பாகம் K. ஸ்ரீனிவாச பிள்ளை
நீத்தார் பெருமை அல்லது மாணிக்கவாசகர்—C. K. சுப்பிரமணிய [முதலியார்

## செய்யுளியற்றல்

நால்வகைப் பாக்கள்

## தமிழ்ப்புலவர்

காப்பியம் (சிறப்பு)

### காப்பியம் I

கல்லாடம்—முதல் 25 பாடல்
சிந்தாமணி—நாமகளிலம்பகம்
சூளாமணி—இரதநூபுரச் சருக்கம்
அகலிகைவெண்பா,—வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

கம்பராமாயணம் :—

பாலகாண்டம்—மிதிலைக்காட்சி
அயோத்தியா காண்டம்—நகர்நீங்கு படலம்
ஆரணிய காண்டம்—சூர்ப்பனகைப் படலம்
கிஷ்கிந்தா காண்டம்—வாலிவதைப் படலம்
யுத்த காண்டம்—அங்கதன் தூதுப் படலம்

### காப்பியம் II

பெரிய புராணம்—தடுத்தாட்கொண்ட புராணம்
கந்த புராணம்—வள்ளிதிருமணப் படலம், சூரனமைச்சியற் படலம்
காஞ்சிப் புராணம் { திருநாட்டுப்படலம்; திருநகரப்படலம் }
தணிகைப் புராணம்—முதல் 300 பாடல்

### காப்பியம் III

திருக்குற்றாலக் குறவஞ்சி (கழகம்)
திருவாரூருலா
தொண்டை மண்டல சதகம்
திருப்புகழ் (கழகப் பதிப்பு)
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (கழகம்)
திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி

## செய்யுளியற்றல்

நால்வகைப்பாவும், பாவினங்களும்

## தமிழ்ப்புலவர்

(சிறப்பு)

சங்கநூல்

### சங்கநூல் I

திருக்குறள்—பொருட்பால்
சிலப்பதிகாரம்—புகார்க்காண்டம்
மணிமேகலை—முதல் 20 காதை
கொங்குவேள்மாக்கதை—உஞ்சைக் காண்டம்

### சங்கநூல் II

நற்றிணை—முதல் 50 பாட்டு
குறுந்தொகை—முதல் 50 பாட்டு
ஐங்குறுநூறு—மருதத்திணை
கலித்தொகை—குறிஞ்சிக்கலி
பத்துப்பாட்டு—மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

### சங்க நூல் III

அகநானூறு—முதல் 10 பாடல்
புறநானூறு—(50 ம் பாடம்) முதல் 150 பாட்டுகள்
பதிற்றுப்பத்து—ஏழாம்பத்து
பரிபாடல்—முதல் 10 பாடல்

## தமிழ்ப்புலவர்

(சிறப்பு)

### இலக்கணம் 1

தொல்காப்பியம்—நச்சினார்க்கினியம்

### இலக்கணம் II

ஒலியிலக்கண ஆராய்ச்சி (P. V. மாணிக்க நாயகர்)

### இலக்கணம் III

இலக்கண விளக்கம்-இலக்கண விளக்கச்சூறாவளி, இலக்கணக் கொத்து, நேமிநாதம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

## சமய நூல்

சைவ சித்தாந்தம் :—

(1) தேவாரம் :—திருத்தாண்டகம் (அப்பர்)
(2) திருவாசகம்
(3)சிவஞான பாடியம்
(4) சிவஞான சித்தியார் (கழகப் பதிப்பு)
(5) சிவப்பிரகாசம்.
(6) திருக்களிற்றுப் படியார்.
(7) சங்கற்ப நிராகரணம்
(8) திருமந்திரம் :—முதல் தந்திரம்
(9) ஞானமிர்தம்:—முதல் 10 அகவல்
(b) பிற சைவ சித்தாந்த நூல்களின் பொது ஆராய்சசி

வைணவ சித்தாந்தம்:—

(1) நாலாயிரப் பிரபந்தப் பொது ஆராய்ச்சி
(2) நம்மாழ்வார், ஆண்டாள் முதல் மூன்று ஆழ்வார் சிறப்பு ஆராய்ச்சி
(3) பகவத்கீதை
(4) பாகவதம்:—10-வது ஸ்காந்தம்
(5) இராமாநுஜ பாஷ்ய மொழி பெயர்ப்பு

## குறிப்பு

தனித்தமிழ்த்தேர்வு விண்ணப்பப் பாரங்களும், தேர்வு முறைகளும் வேண்டுவோர், ஓர் அணு தபாற்றலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு தேர்வில் தேறியே மற்றொன்றிற்குச் செல்லவேண்டு மென்ற நியதியில்லை. ஆனல் சிறப்புப்பட்ட தேர்வுக்கு வருவோர் ஓர் ஆண்டில் ஒரு தேர்வுக்கே விண்ணப்பிக்கலாம். எந்தச் சிறப்புப் பட்டத் தேர்வுக்கு வருகின்றவரும், முதலில் தமிழ்ப்புலவர் பொதுவிற் குரிய பாடங்களில் தேர்ச்சியுறுதல் இன்றியமையாதது. பொதுப்பாடத் தேர்ச்சியில்லாது, சிறப்புத் தேர்ச்சிமட்டு மிருந்தும் பயனில்லை.

தேர்வுகள் விஷயத்தில் மொத்த அம்சத்தில் 100-க்கு 60 அம்சம் பெறுவோர் முதல் வகுப்பினராவர். 100-க்கு 50-ம்

அதற்குமேல் 60 வரை வாங்குவோர் இரண்டாம் வகுப்பின ராவர். 100-க்கு 40-க்குக் குறையாமல் 50-வரை வாங்கு வோர் மூன்றும் வகுப்பினராவர். தேர்ச்சிக்குத் தகுதியா வோர் ஒவ்வொரு பாடவகையிலும் 100-க்கு 25-க்குக் குறை யாமல் எடுக்கவேண்டும். தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கும் எல்லா வகுப்பினருக்கும் தகுதிப்பத்திரம் சங்கத்தலைவரவர்கள் கையெழுத்துடனும் சங்க முத்திரையுடனும் வழங்கப் பெறும். தேர்வுகளில் தேர்ந்தவர்களின் விபரம் செந்தமிழ்ச் செல்வி முத லிய பத்திரிகைகளில் வெளியிடப்பெறும்.

## பரிசு பெறுவோர்

ஒவ்வொரு தேர்விலும் முதல் வகுப்பில் தேறிய முதல் மூவருக்கு மட்டும் அடியிற் குறித்தபடி பரிசளிக்கப்படும்.

| எண். | தேர்வு. | முதற்பரிசு. | இரண்டாம்பரிசு. | மூன்றும் பரிசு. |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்த் தேர்வு. | 50 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் | 30 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் | 20 ரூபா |
| 2 | இளந்தமிழ்ப் புலவர் | 75 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் | 50 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் | 30 ரூபா பெறத்தக்க வெள்ளிப்பதக்கம் |
| 3 | தமிழ்ப் புலவர் | 100 ரூபா பெறத்தக்க தங்கத்தோடா | 75 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் | 50 ரூபா பெறத்தக்க தங்கப்பதக்கம் |

தமிழ்த்தேர்வு முறைக்கு ரூபா ஒன்றும், இளந்தமிழ்ப் புல வர் தேர்வுக்கு ரூபா இரண்டும், தமிழ்ப்புலவர் பொதுத் தேர் வுக்கு ரூபா மூன்றும் தமிழ்ப்புலவர் சிறப்புக்குத் தனியாக வரின் ரூபா ஐந்தும் பொதுவுடன் ஒரே யாண்டில் வரின் இரண்டுக்கும் ஒரு சேர ரூபா ஏழும் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டியதாகக் கட்டணத் தொகை விதிக்கப்பெற் றுள்ளது. இத்தொகை விண்ணப்பத்துடன் ஒவ்வோர் ஆண்டும் வைகாசிமீ முதல் தேதிக்கு முன், சங்க அமைச்சர் விலாசத் துக்கு அனுப்பப் பெறவேண்டும்.

தேர்வுக்காலங்களிற் பெண்பாலர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படும்.

தேர்வு நடைபெறும் தேய்தி, ஒவ்வொரு வருடத்திலும் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தினின்று வெளிவரும் 'செந்தமிழ்ச் செல்வி' மாத இதழில் குறிக்கப்படும்.

**தேர்வு விஞைத்தாள்கள்** வேண்டுவோர், தபாற் கூலியும் தமிழ்த்தேர்வுக்கு 4 அணுவும், இளந்தமிழ் புலவர் தேர்வுக்கு 6 அணுவும், தமிழ்ப்புலவர் தேர்வுக்கு அணு 8-ம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஐவருக்குமேல் விண்ணப்பங்கள் இருக்குமானல் முக்கியமான பிற இடங்களிலும், பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

திருநெல்வேலி, 22-7-29 } பு. சி. புன்னைவனநாதன், அமைச்சர்.

---

## மதிப்புரை

**நளாயனி வெண்பா**: இப்பெயர் கொண்டதொரு செய்யுணூல் எமது பார்வைக்கு வந்தது. இதன் ஆசிரியர் திருப்பத்தூர் நூல் மளிகை திருவாளர் கா. அ. சண்முக முதலியாரவர்கள். இந்நூல் மணம்புரி காதை, கான்புகு காதை, நோய்தொடர் காதை, பூவலஞ்செய் காதை, இன்பமெய்திய காதை, என்னும் ஐந்து காதைகளாகப் பிரிக்கப்பட்டுத் திறமான வெண்பாக்களால் இயற்றப்பட்டுள்ளது. வெண்பாக்களுக்குக் குறிப்புரையும் வரையப்பட்டுள்ளது. கலிக்கோ கட்டிடம், விலை ரூபா க. வேண்டுவோர் இதன் ஆசிரியர்க்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

---